Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 25 புதன்கிழமை (10.09.2014) பக்கங்கள் 20 ஓசை - 344

### நான்காவது தடவையும் (உ/த) பரீட்சையில்

## தோற்றிய மாணவர்களுக்கு பல்கலை அனுமதிக்கு வாய்ப்பு

(கொழும்பு)

க.பொ.த(உ/த) பரீட்சையில் நான்காவது தடவையாகவும் பரீட்சைக்குத் தோற்றியவர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவது இலங்கை வரலாற்றில் இதுவே முதன்முறையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கனிகா ஹிரிம்புருகேகம தெரிவித்துள்ளார்.

கடந்த 2011,2012 காலப்பகுதியில் பரீட்சைக்கு மூன்றாவது தடவையாகவும் பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களின் இஸட் புள்ளிக்குளறுபடிகள் தொடர்பாக நீதிமன்ற தீர்ப்பை அடுத்து குறித்த மாணவர்களை நான்காவது தடவையாகவும் பரீட்சைக்குத் தோற்ற நாம் அனுமதியளித்தோம். இதன்மூலம் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்கள் மேலும் 600 ஆக அதிகரிக்கப்பட உள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை மானிய ஆணைக்குழு மேலதிக செயலாளர் டாக்டர் பிரியந்த பிரேமகுமார தெரிவிக்கையில், இந்த வருடம் 24178 மாணவர்கள் பல்கலைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய ஆணையாளரை சந்திக்க அரசாங்கம் கோரிக்கை விடுப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளர் இளவரசர் செய்ட் ராட் அல் ஹுசைனை சந்திப்பதற்கு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் 27ஆவது அமர்வு இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்த சந்திப்புக்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ். ஆணையாளர் ஹுசைனுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் ஆணையாளருடன் உறவை மேம்படுத்திக் கொள்ள அவர் விருப்பம் வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே பதவியில் இருந்த ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் அரசாங்கம் விரிசல் மிக்க உறவையே கொண்டிருந்தது.

இந்தநிலையில் புதிய ஆணையாளருடன் புரிந்துணர்வான உறவைக் கொண்டிருக்க விரும்புவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளராக பதவியேற்ற ஹுசைன்

19 ஆம் பக்கம் பார்க்க



# கூட்டமைப்பு நிபந்தனை நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

சர்வதேச மத்தியஸ்தத்துடன் குறித்த காலப்பரப்பினுள் பேச்சினை நடத்தத் தயாரென கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் விதித்த நிபந்தனையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனினால் விடுக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்க முடியாது என சிரேஷ்ட அமைச்சரும், சர்வ கட்சி குழுவின் முன்னாள் தலைவருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த மட்டத்திலும் கலந்துரையாடல்களை நடத்தினால், அது சிறந்ததாகும். இதனை முன்னோக்கிக் கொண்டு செல்லவே

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண முதல்வருக்கு கிடைத்தது சொகுசு வாகனம்



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோருக்கான சொகுசு வாகனங்கள் நேற்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் வழங்கி வைக்கப்பட்டன.

வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் செயலாளர்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் ஊடுருவலைத் தடுக்க அமைச்சரவைப்பத்திரம் தாக்கல்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

வடபகுதி கடற்பரப்பில் எமது மீனவர்களின் சொத்துக்களும், கடல்வளமும், வாழ்வாதாரமும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவலால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்கு தீர்வு காணும் பொருட்டு தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைப் பத்திரமொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அந்த அமைச்சரவைப் பத்திரத்தின் படி எமது கடற்பரப்பில் மீன்களின் ஆதாரமும் இனப்பெருக்கத்திற்கான தளமும் அதிகளவில் சேதமாக்கப்பட்டு வருகின்றன என்றும், ஆனாலும், அரசாங்கம் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கைது செய்து வருவதால் இந்த நிலைமை

19 ஆம் பக்கம் பார்க்க

## மூன்றாவது தடவையும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் வழக்கு


### சரத் என் சில்வா தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பதற்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பேன் எனத் தெரிவித்துள்ள முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இது குறித்த வழக்கில் தானே ஆஜராவேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது ஆட்சிக்காலத்தை நிறைவு செய்த பின்னர் மூன்றாவது தடவையும் தேரதலில் போட்டியிட முடியாது-

ஜனாதிபதி ஒருவர் மூன்று

19 ஆம் பக்கம் பார்க்க




## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

# தீயில் கருகியது மோட்டார் சைக்கிள்; கல்வியங்காட்டில் நேற்று விபரீதம்

கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட பெற்றோல் ஒழுக்கினால் மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பிடித்து எரிந்தது.

நேற்று மாலை 1.30 மணியளவில் கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இந்த விபரீதம் இடம் பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஏற்பட்ட பெற்றோல் ஒழுக்கினால் மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து எரிந்து சேதங்களுக்குள்ளாகியது. இதில் மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை. எனினும் தீப்பிடித்து எரிந்த மோட்டார் சைக்கிளை பொதுமக்கள் தண்ணீர், மணல் கொண்டு அணைத்தனர்.

கடந்த வருடமும் குறித்த இடத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று தீப்பற்றி எரிந்து ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# அறநெறிப் பள்ளியில் மாணவர் அனுமதி

வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அறநெறிப்பள்ளியில் கல்வி கற்க விரும்பும் பிள்ளைகள் இலவசமாக கல்விபயிலமுடியும்.

மேலும் இப்பள்ளியில் வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சைவ சமயம் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுவதாகவும், எனவே சேர விரும்பும் பிள்ளைகள் நேர டியாக அறநெறிப் பள்ளிக்கு சமுகமளிக்குமாறும் சைவப் புலவர் கா.கமலநாதன் தெரிவித்தார். (150)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
30 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
06.10.2014

## அறிவித்தல்

06.09.2014 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரம் தொடர்பாக வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்கள் 2013 கார்த்திகை மாதமும் அதற்குப் பின்னர் நடாத்தப்பட்ட தேர்வுகளிலும் சித்தியடைந்தவர்கள் தமது வேண்டுகோள் விண்ணப்பத்தினை 23.09.2014 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்குமாறு அறியத் தருகிறேன்.

பதிவாளர்,
09.09.2014. (C/3510)



## ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1090 — திகதி 08.09.2014

வெற்றி எண்கள்: 11 12 13 23 — ஆங்கில எழுத்து: V

ஜக்பொட் பரிசு ரூ. 3,83,59,300/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,83,59,300/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 4 | 50,000/= | ரூ. 2,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 149 | 1,000/= | ரூ. 1,49,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 296 | 1,000/= | ரூ. 2,96,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 7241 | 60/= | ரூ. 4,34,460/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 3843 | 40/= | ரூ. 1,53,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 94527 | 20/= | ரூ. 18,90,540/= |
| ஆங்கில எழுத்து | 13709 | 20/= | ரூ. 2,74,180/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 43,97,900/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 38,544,400/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.09.11 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை
யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333646/7
(C/3797)


# சர்வதேச நல்லொழுக்க தினம் வடமராட்சியில் விரிவான ஏற்பாடு

(வடமராட்சி)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் வருடாந்தம் நடாத்தும் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வுகளை இம்முறையும் நடாத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இம்முறையும் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக பேச்சு, நாடகம், விவாதம் ஆகிய துறைகளில் போட்டிகளை நடாத்தவுள்ளதாக அதன் செயலாளர் ஆ.குலநாதன் அறிவித்துள்ளார்.

### பேச்சு

**ஆரம்பப் பிரிவு- தரம் 4,5**
போட்டி - பேச்சு (2 நிமிடம்- 3 நிமிடம்)

தலைப்பு-சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல்.

**கீழ்ப்பிரிவு - தரம் 6,7,8**
போட்டி-பேச்சு (3நிமிட-4 நிமிடம்)

தலைப்பு-புகை பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன்வருவோம்.

**மத்தியபிரிவு - தரம் 9,10,11**
போட்டி - பேச்சு (4 நிமிடம் - 5 நிமிடம்)

தலைப்பு -மது பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன்வருவோம்.

**மேற்பிரிவு - தரம் 12,13**
போட்டி - பேச்சு (4 நிமிடம் 5 நிமிடம்)

தலைப்பு-போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன்வருவோம்.

**நாடகம் - திறந்த போட்டி**

தலைப்பு - மது, புகை, போதையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன்வருவோம்.

பங்கு பற்றும் மாணவர்கள் 15 - 20 எண்ணிக்கை

நேரம் - 25 -30 (நிமிடம்)

### விவாதம்

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் (தரம் 12,13)

தலைப்பு - இன்றைய சமுதாயத்தை மது,புகை,போதை பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயமாக உருவாக்க உதவுவது பாடசாலைச் சமூகமா? புறச்சூழலா?

ஒரு அணியில் மூவர் மொத்தமாக அறுவர் பங்கு பற்றுதல் வேண்டும். ஒருவருக்கு 3 நிமிடமும் அணியின் தலைவருக்கு தொகுப்புரை வழங்குவதற்கு மேலதிகமாக 2 நிமிடமும் வழங்கப்படும்

இப்போட்டிகளில் பேச்சு போட்டியில் ஒவ்வொரு பிரிவுகளிலும் ஒருவருடைய பெயரினையும் ஏனைய போட்டியாளர்களின் பெயர் விபரங்களையும் இரட்டை பிரதிகளில் தயாரித்து தவறாமல் 15.09.2014 திகதிக்கு பிந்தாமல் இணைப்பாளர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், அல்வாய் கிழக்கு, அல்வாய். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்படி போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும், பங்கு பற்றியவர்களுக்கும் ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.போட்டிகள் நடைபெறும் இடம் காலம் பற்றிய விபரங்கள் போட்டியாளர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்விக்கான உதவி; வறிய மாணவர்களுக்கு

யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் நலன் விரும்பியான பரமநாதன் திருநீலகண்டனால் இப்பாடசாலையில் பயிலும் வறிய மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கற்றலில் நாட்டமுடைய மாணவர்கள் பெறுமதிமிக்க உதவிகளைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இப்பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

# பூநகரியில் காலபோக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட 20 கமக்கார அமைப்புக்களுக்குமான காலபோக விவசாயக் கூட்டம் திட்டமிடப்பட்ட நேரசூசிகையின் அடிப்படையில் பூநகரி கமநல சேவை அலுவலகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகள் கலந்து கொள்ளும் இக்கூட்டங்களில் கால்நடைகளைக் கட்டுப்படுத்தல், விதை நெல்லைப் பெற்றுக்கொள்ளல் விதைப்பு ஆரம்பிக்கும் திகதி, விவசாயிகளுக்கான மானிய உர விநியோகம் ஆகிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதால் சகல விவசாயிகளும் தங்கள் பிரதேசங்களில் நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்வது முக்கியமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. (112)

# தீயில் கருகி பெண் மரணம்

வடமராட்சி தம்பசிட்டியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தீயில் கருகி மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று தம்பசிட்டியில் இடம்பெற்றுள்ளது. நேற்று மாலை 5.30 மணியளவில் இந்த இளம் குடும்பப் பெண் தனக்குத் தானே தீ மூட்டி எரிந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவ நேரம் வீட்டில் எவரும் இல்லாத காரணத்தால் அவர் தீயில் கருகி மரணமடைந்தார். விக்கினேஸ்வரன் சீதாதேவி (வயது-36) என்ற பெண்ணே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது சடலம் நேற்று மாலை மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3800)


# வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)


நேற்றுக்காலை புறாப்பொறுக்கி, ஆலடிப் பகுதியில் வீதி விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

செல்வச்சந்நிதிக்கு சென்று கொண்டு இருந்த தேவன் ரவிந்திரராஜ் என்பவர் தண்ணீர் பந்தலில் சக்கரைத் தண்ணீர் குடித்து விட்டு மறுபுரம் வீதியைக் கடக்கும் பொழுது சந்நிதியிலிருந்து வந்த மினி பஸ்ஸின் சில் மோதியதால் பலத்த காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மினி பஸ் நடத்துநர் நெல்லியடி பொலிஸாரினால் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளார். (18)

# பூமியை முத்தமிடத் துடிக்கும் தொலைத் தொடர்புக் கம்பம்

காத்திருக்கிறது ஆபத்து



(யாழ்ப்பாணம்)

750 வழித்தடமான பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் மாலு சந்திக்கும் நெல்லியடிக்கும் இடைப்பட்ட தூரத்தில் ரெலிக்கொம்புக்கு உரிய கொங்கிறீற் தூண் தலைகீழாகத் தொங்கிய நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் மூன்று நாட்களாக கவனிப்பாரன்றிக் காணப்படுகின்றது. (18)

# தேசிய முதியோர் பராமரிப்பு போட்டியில் யாழிலிருந்து 2 நிலையங்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சமூக சேவைகள் திணைக்களத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடாத்தப்படவுள்ள தேசிய ரீதியில் சிறந்த முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கான போட்டியில் பங்குபற்றுவதற்கு யாழ். மாவட்டம் சார்பாக சண்டிலிப்பாய் கல்வயல் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

வடமாகாண முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கிடையிலான போட்டியில் முதலிடத்தை பெற்றுக் கொண்டதன் அடிப்படையில், தேசிய மட்ட போட்டிகளில் சண்டிலிப்பாய் கல்வ்யல் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் கலந்துகொள்ளவுள்ளது.

மேற்படி போட்டியானது சமூக சேவைகள் அமைச்சால், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொண்டாடப்படவுள்ள முதியோர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப்போட்டியில், முதியோர் பராமரிப்பு தொடர்பிலான ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டு சிறந்த முதியோர் பகல் பராமரிப்பு இல்லங்கள் தெரிவு செய்யப்படும்.

சண்டிலிப்பாய் கல்வயல் முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் 100 வரையான முதியவர்கள் அங்கத்தவர்களாக இருப்பதுடன், அங்கத்தவர்கள் தங்கள் பகல் பொழுதை மகிழ்ச்சியாக கழிப்பதற்கு பத்திரிகைகள் வாசிப்பதற்கான ஒழுங்குகள், மற்றும் தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒழுங்குகள் என்பன செய்யப்பட்டுள்ளன.

மேலும், முதியவர்களுக்கு காலையில் தேநீருடன், பணிஸ் வழங்கப்படுவதுடன் சில வேளைகளில் நல்லுள்ளம் கொண்டவர்களின் நிதியுதவியில் மதியபோசனமும் வழங்கப்படுகின்றது.

தேசிய ரீதியில் சிறந்த முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கான போட்டியில் கடந்த 2013 ஆம் ஆண்டு, சண்டிலிப்பாய் கல்வயல் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் இரண்டாமிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.சுகாதார சேவைகள் பணிமனைக்கு தேசிய உற்பத்தித்திறன் விருது




(யாழ்ப்பாணம்)

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் போது அரச திணைக்களங்களுக்கான பிரிவில் மூன்றாம் இடத்தை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பெற்றுக்கொண்டது.

இதற்கான விருதை உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூரிடம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பெற்றுக் கொண்டார். வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சு.இரவீந்திரனும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

# முதுகலை மாணி பட்டப்படிப்புக்கு கல்வி நிறுவன அபிவிருத்தித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

மருத்துவ முதுகலைமாணி பட்டப் படிப்புக்கான (PGIM) கல்வி நிறுவன அபிவிருத்தி திட்டம் உயர் கல்வியமைச்சினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவன கட்டட வேலைக்கென 1610 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 8761 பரப்பளவு தரைசுற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகள் இன்னும் 03 வருடங்களில் நிறைவடையும்,

இக்கல்வி நிறுவனத்தின் மூலம் மருத்துவ விசேட நிபுணர்களின் வருகையினை அதிகரிக்க முடிவதுடன், விசேட பயிற்சி தொழில் வாய்ப்புகளுக்கான வசதியை எமது மாணவர்களுக்கு வழங்கவும் முடியும். அத்துடன் அரசாங்கத்தின் திறைசேரித் திட்டம் மற்றும் மருத்துவ முதுக்லை மாணி நிறுவனம் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் சமூகத்தில் 06 வருடங்களுக்கான அடிப்படைக் கல்வியை வழங்கக்கூடியதாக அமையும்.

அடுத்த மூன்று வருடங்களில் ஆய்வுகளை சிறந்த விதத்தில் தொடர்வது உட்பட மருத்துவத் துறைக்கான முதுகலைமாணி பட்டப்படிப்பினை தொடர கல்வி நிறுவனமொன்றினை அனைத்து வசதிகளுடனும் இத்திட்டத்தின் அவசியத்தை புரிந்து கொள்ளும் விதத்தில் இலங்கை திறைசேரி 2,500 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வழிகாட்டலில் சிறந்த தரத்துடனும் குறைந்த நிதி ஒதுக்கீட்டில் விரைவான காலப்பகுதியில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற் கென 05 கட்டடக்கலை வடிவமைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# மன்னர்களும்... மக்களும்... மற்றுமுள்ள ஜனநாயக மறுப்பும்...




தமிழர்களுக்கும் ஜனநாயகத்துக்கும் வெகு தூரம். சில பழக்கங்கள் சிலருக்குச் சுட்டுப்போட்டாலும் வருவதில்லை. அதைப்போல ஜனநாயகம் என்ற விசயம் தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கு வரவே வராது. அவர்களுக்கு அது புரியவும் மாட்டுது.

இன்று தமிழர்கள் உலகெங்கும் சிதறிப் பரந்து வாழ்கிறார்கள்.

இப்படி அவர்கள் சிதறி வாழவேண்டியேற்பட்டதே ஜனநாயகமின்மையால்தான்.

ஒன்று கொழும்பு அரசியற் தலைமையின் ஜனநாயக விரோதப்போக்கினால் ஏற்பட்டது. மற்றது, தமிழ்ச் சூழலில் நிலவும் ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளின் விளைவினால்.

ஆகவே உலகத்திசையெங்கும் அகதிகளாகச் சிதறிப் பல்கிப் பெருகியுள்ள தமிழ்க்குடிக்கு இன்று ஜனநாயகத்தின் அருமை பெருமையெல்லாம் தெரிந்திருக்க வேணும்.

உள்நாட்டில் நிலவிய ஜனநாயக மறுப்பின் தீமையைப் பற்றியும் தற்பொழுது தாம் வாழுகின்ற நாடுகளில் நிலவுகின்ற ஜனநாயக உரிமைகளின் நன்மை பற்றியும் புலம்பெயர்ந்திருக்கிறவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனாலும் அவர்களிற் பலர் நடைமுறையில் ஜனநாயக விரோதிகளாக அல்லது ஜனநாயக மறுப்பாளர்களாகவே உள்ளனர்.

இதற்கு நல்ல உதாரணம், அவர்களால் நடத்தப்படுகின்ற இணையத்தளங்களும் ஊடகங்களும்.

மேலும் உதாரணம் வேண்டுமென்றால் அவர்களுடைய முகப்புத்தகங்கள்.

இன்னும் சொல்லவேண்டுமானால், அவர்கள் புலம்பெயர் நாடுகளில் நடத்துகின்ற நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்கள்.

ஆனால், இவர்களுக்கே ஜனநாயகத்தின் மாண்பு புரிந்திருக்க வேணும். அதன் லாப நட்டங்களை மதிப்பிடக்கூடிய வாய்ப்பு இவர்களுக்கே உண்டு.

மட்டுமல்ல, அங்குள்ள ஜனநாயகச் சூழலின் வளங்களையும் வாய்ப்புகளையும் இவர்கள் தாராளமான அனுபவிக்கின்றனர்.

இவ்வளவும் இருந்தும் இவர்கள் ஜனநாயகத்தை மறுப்பதுதான் புரிந்துகொள்ளக் கடினமானது.

இவர்களின் நிலையே இப்படியென்றால், ஆண்டபரம்பரைக் கனவோடும், சாதி, மத, பிரதேச வெறியோடு வாழுகின்ற உள்ளூர்த்தமிழ்க்குடியின் நிலையைப் பற்றிச் சொல்ல வேணுமா?

தமது கருத்துக்கு மாற்றுக் கருத்து இருக்கக் கூடாது.

தமது அணிக்கு மாற்றாக இன்னொரு அணி செயற்பட முடியாது.

தாம் சொல்வதற்கு மறு அபிப்பிராயம் கிடையாது.

இந்த மாதிரித்தான் தமிழ்ப்பெருங்குடி வாழ்கிறது, வாழ விரும்புகிறது, வாழமுற்படுகிறது.

ஏகப்பிரதிநிதித்துவம், ஏகத்தலைமை போன்றனவெல்லாம் இந்த வகையினவே.

முன்னர் தமிழரசுக் கட்சி இப்படித்தான் செயற்பட்டது. பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணி. பின்னர் புலிகள். தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய முன்னணி உள்ளிட்ட தமிழ்த்தேசிய (முகமூடி) சக்திகள்.

இவைகளின் அணுகுமுறையும் அரசியலும் ஜனநாயக மறுப்பில்தான் வேர் விட்டுள்ளது.

தமிழ்த்தேசியத்தின் பெருங்குறைபாடே அது உள்ளும் புறமும் விரிய மறுப்பதனால் ஏற்படுவதே என தமிழ்த்தேசிய அபிமானிகளிற் பலரும் விமர்சகர்களும் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், அது ஒரு போதும் விரியாத – விரியக் கூடிய இயல்பற்ற மூடுண்ட அமைப்பாகவே இருக்கிறது.

இன்னும் முடியாட்சி சிந்தனைதான் இங்கு கோலோச்சுகிறது. அந்தமாதிரிச் சிந்தனை இருப்பதனால்தான் மாகாண சபையை வென்றவுடன் "மலர்ந்தது தமிழரசு" என்று எழுதினார்கள்ளூ சம்பந்தனுக்கும் விக்கினேஸ்வரனுக்கும் மன்னர்களுக்குரிய கிரீடத்தை சூட்டினார்கள் கையில் வேலாயுதத்தைக் கொடுத்து செங்கோல் ஏந்திய பெருமிதத்துடன் வீற்றிருக்கப் பண்ணினார்கள்.

வயது போய் மணிவிழாவைக் கொண்டாடும்போது கூட ரத்தினங்கள் பதித்த சிம்மாசனங்களில் பட்டுப் பீதாம்பரங்களுடன் அமர்ந்து போஸ் குடுத்து பத்திரிகைகளில் வெளியிட்டுக் கொள்கிறார்கள்.

சாதாரண மக்களின் திண்டாட்ட வாழ்க்கை பற்றி இவர்களுக்கு எப்பனும் கவலையில்லை. தங்களது வாழ்வும், தங்களது வீம்பும், தங்களது பதவிப் பெருமிதங்களும்தான் இவர்களது குறி.

தமது விருப்பத்தைத் தவிர, வேறு எதற்கும் இடமில்லை என்பது ஒரு போதை.

இந்தப் போதையால்தான் இலங்கைத்தீவு இரத்தம் சிந்தியது.

இலங்கையின் இருண்டகாலத்தை உருவாக்கியதும் இந்தப் போதையே.

இதுதான் பிறரிடம் நம்மை மண்டியிட வைப்பதும்.

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## குறைகளை மறைக்கும் வெறுப்பு!

எல்லாமே மாறும் என்பதொன்றுதான் மாற்றமில்லாதது என்பது கார்ல் மார்க்ஸின் பிரபலமான சூத்திரம். அப்படியானால் பகையும் வெறுப்பும் விரோத உணர்வுகளும் கூட மாறித்தான் ஆகவேண்டும்.

இவை மாறாமல் அல்லது இவற்றை நம்மிடமிருந்து அகற்றாமல் நாம் சமனப்பட்ட மனநிலையில் விஷயங்களை அணுகுவது சாத்தியமேயில்லை.

நம் பார்வையில் விரோதிகளாகத் தெரிபவர்கள் எது சொன்னாலும் என்ன செய்தாலும் அது மேலும் மேலும் வெறுப்பை ஏற்படுத்தி விலகலை அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

நம்மிடம் மட்டும்தான் முழுச் சரியும் இருக்கிறது, எதிராளிகளிடம் இருப்பது முழுக்க முழுக்கப் பிழையே என்கிற முடிவான தீர்மானங்களுடன் நாம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது.

எல்லா அன்புமே சரியானதெனச் சொல்ல முடியாதபோது, வெறுப்பு எப்படி நமக்குச் சரியாக முடியும்? ஒருவகையில் படைவீரர்களின் கொலைகளும் கூட அன்பின் காரணமாகச் செய்யப்படுபவை அல்லவா? அதாவது தேசத்தின் மீது கொண்ட அன்பினால்தான் நான் கொலைகள் செய்கிறேன் என்கிற விளக்கம் அந்தப் படைவீரனிடம் இருக்கக்கூடும்.

தமிழ் மக்களின் மீதுள்ள ஆற்றா நேசமே தமிழர்கள் அல்லாதவர்கள் மீது குரோதமாகப் பாய்வதையும் நாம் எப்படி மறுத்திட முடியும்?

மக்கள் படும் கஷ்டங்களை நீக்குவதற்காக, எங்களது எந்தவொரு வீம்பையும் விட்டுக்கொடுக்கத் தயாரில்லாத மனநிலையானது, மேட்டுக்குடி சுயலாப அரசியலில் திளைப்பதற்கே உரியதல்லவா?

போரினால் இழந்தவைகளை மீளப்பெற்றுத் தங்கள் இயல்பு வாழ்வை அடைந்துவிட முடியுமா என்ற ஏக்கத்துடன் உலைபவர்களுக்கு இந்த மனநிலையால் ஏது செய்து ஆற்ற முடியும்?

அவர்கள் சுமக்க நேரிட்ட கஷ்டங்களினால் மக்களுக்கு உண்டான விரக்தியையும் கோபத்தையும் வெறுப்பையும் தவறான வழியில் அரசியலாக்கிப் பிழைப்பது கேவலமில்லையா?

சிங்கள அரசுக்குச் சவால் விட்டபடி, அவர்களைப் பணிய வைக்கும் காலத்திற்காகக் காத்திருக்க, போருக்குத் தப்பி உலகெங்கும் ஓடியோ உள்ளூரில் சுழித்தோ 'வாழ்ந்திருக்க' முடிந்த சிலருக்கு முடியுமாக இருக்கலாம்.

ஆனால், போருக்குள் வில்லங்கமாகச் சிக்கவைக்கப்பட்டு நொந்தலையும் சாதாரண மக்களுக்கு இன்றைய உடனடித் தேவைகளே பெரும் ஏக்கமாக இருக்கையில், யாருடைய வாழ்வை அழித்து யார் வீம்பு கொள்வது?

நாம் மீள்வதற்கான வழிகளை அடைத்தபடியே வீம்பு அரசியலைத் தொடர்ந்து நடத்தும் வீரப் பாவனைகளை இனி நாம் நிறுத்த வேண்டும்.

புண்பட்ட மனங்கள் வெறுப்பை எளிதில் வாங்கிக் கொள்கின்றன. ஆவேசத்தால் அழிவுகளை உருவாக்கிப் பின் அந்த அழிவுகளால் ஆவேசத்தை வளர்த்து மேலும் மிகையழிவு தேடி.... என்னும் இந்தச் சுழலிலிருந்து இனி நாம் விடுபட வேண்டும்.

வெறுப்பில் இருந்து ஆக்கபூர்வமாக எதுவும் உருவாகாது. அரசியல் தேவைகளுக்காக உருவாக்கி வளர்க்கப்படும் வெறுப்பு, வரலாற்றில் மிகப்பெரிய விலையை நம்மிடம் கோரும் என்பதும் நாம் அறிந்த பாடம்.

வெறுப்பு, நமது குறைகளை நாம் காணமுடியாதபடி மறைத்துவிடுகிறது. முதலில் நம் குறைகளை இனங்கண்டு களைவதன் மூலமே நம்மை நீதியுள்ள சமூகமாக்கிக் கொள்ள முடியும்; அதுவே நாம் வெற்றி பெறுவதற்கான, வாழ்வதற்கான வழிக்கு இட்டுச் செல்லும்.

- ஆசிரியர்

# சர்வதேசத்துடன் கைகோர்ப்பது கூட்டமைப்பிற்கு அழிவையே தரும்

### - அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை -

அரசாங்கத்தை பலவீனப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்துடன் கைகோர்ப்பது இறுதியில் கூட்டமைப்பிற்கே அழிவைத் தேடித் தரும். என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

புலிகளின் ஆயுதப் போராட்டம் வெற்றியளித்திருக்குமாயின் இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ்த் கட்சிகள் விடுதலைப் புலிகளின் ஆதரவுக் கட்சிகளாக செயற்பட்டிருப்பார்கள். இன்றும் இவர்கள் சர்வதேச அரங்கில் புலிகளை ஆதரித்து அவர்களை நியாயப்படுத்துகின்றனரே தவிர தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை கவனத்திற்கொள்ளவில்லை.

சர்வதேசத்துடன் உறவினை மேற்கொண்டு அதன் மூலம் இந்த அரசாங்கத்தினை பலவீனப்படுத்த முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைக்குமாயின் இறுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே அழிவினை எதிர்கொள்ளும். இந்தியாவோ ஐ.நா.அமைப்போ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சைக் கேட்கவில்லை. தமது தேவையினை நிறைவு செய்ய இப்போது கூட்டமைப்பினை பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் இறுதியில் அரசாங்கத்திடமே வந்தாக வேண்டும். இதனை தமிழ் தரப்பினர் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுமாயின் அதை தேசிய அளவிலேயே கையாள வேண்டும். எனினும் இன்று தமிழ் தரப்பினரே சர்வதேச ஆதரவினை நாடியுள்ளனர்.

அதேபோல் அரசாங்கத்தின் எவ்வித கோட்பாட்டிற்கும் இணங்காது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமெனப் போராடுவதும் ஒரு போதும் சாத்தியமாவதில்லை. என்றார்.

# சிங்கள மக்களின் ஆதரவின்றி தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காது

### - கூறுகிறார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

சிங்கள மக்களின் ஆதரவில்லாமல் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்காது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொள்ள வேண்டும் என சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு அறவழிப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் சர்வதேசத்தின் அழுத்தத்துடன் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகவும் மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்துள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனென்றால் சர்வதேச அழுத்தங்களில் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அரசாங்கம் இவ் வாறான அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதும் இல்லை.

சிங்கள மக்களின் ஆதரவுடனேயே தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை பெற முடியும். பெரும்பாலான சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதை ஆதரிக்கின்றனர். ஆனால், சர்வதேச அழுத்தத்தை நாடினால் அந்த ஆதரவும் கிடைக்காமல் போய்விடும்.

ஆனால் இப் பிரச்சினையில் மூன்று தரப்பு தொடர்புபட்டுள்ளது. இலங்கை அரசு தமிழர் தரப்பு. மற்றும் இந்தியா.

எனவே, இந்தியாவினது மத்தியஸ்தம் அவசியமானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வளமான எதிர்கால சந்ததிக்கு கல்வி – சுகாதார இணைவு அவசியம்

### - சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு -

கல்வித்துறையும் சுகாதாரத்துறையும் இணைந்து செயற்பட்டால், வளமான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும் என சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கே.ரஜீவ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறையைச்சேர்ந்தவர்கள் பாடசாலைகளுக்கு வரும்போது மாணவர்களுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை பாடசாலை நிர்வாகம் வழங்க வேண்டும். இதனால், மாணவர்கள் மத்தியில் சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். நாட்டில் இளவயதுக் கர்ப்பம், சிறுவர் துஷ்பிரயோகம், சட்ட விரோத கருக்கலைப்பு என்பன நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இதனால், பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் பாடசாலை மாணவர்களாக இருக்கின்றனர். இது தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதாரக் கழகங்களை உருவாக்கி சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பிலும் பருவ மழை ஆரம்பமாகவுள்ள நிலையில், டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளமையால் அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

# பாடசாலை மாணவர்களுக்கு சைவசமய பரீட்சை

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு கடந்த 60 வருடகாலமாக நடாத்தி வரும் சைவசமய அறிவுப்பரீட்சை, செயல்முறைப் போட்டி ஆகியவற்றை இவ்வருடமும் நடத்தவுள்ளது.

தரம் 1,2 மாணவர்களுக்கு நீதிநூல் மனனப் போட்டியும், தரம் - 3 தொடக்கம் தரம் - 11 வரையிலான மாணவர்களுக்கு சைவசமய அறிவுப்பரீட்சையும், கோலம்போடுதல், மாலை கட்டுதல், தோரணம்பின்னுதல் ஆகிய செயல்முறைப்போட்டிகள் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என்னும் இருபிரிவுகளில் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சைவசமய அறிவுப்பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதியும், நீதிநூல் மனனப் போட்டி ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியும், செயல்முறைப்போட்டி நவம்பர் மாதம் 2ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி செப்ரெம்பர் 19ஆம் திகதியாகும். பரீட்சையிலும், போட்டியிலும் முதல் 3 இடங்களைக்பெறுபவர்களுக்கான பரிசில்கள் 2015 சிவராத்திரி தினத்தன்று வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையிலும், போட்டிகளிலும் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல, 82, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப 2மணி முதல் மாலை 6மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஒரு பாடசாலையில் இருந்து சைவசமய அறிவுப்பரீட்சைக்கு 100 பரீட்சார்த்திகள் தோற்றுவார்கள் ஆயின அப்பாடசாலையை ஒரு பரீட்சை நிலையமாக அமைத்துக்கொள்ளலாம் என்றும், விண்ணப்பப்படிவங்கள் யாவும் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. என்றும் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சைச் செயலர் சு. சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

# வெறுப்பின் உறுப்பமைவு

**வெறித்தனமான வெறுப்புணர்விற்கு இரையாகும் மக்கள் நம்மிடையே இருக்கிறார்கள். "நான் என்ற ஒன்று மட்டுமே நல்லது, சிறந்தது. எங்களுடைய குழு மட்டுமே அதி சிறந்தது. நாம் நம்முடைய இன மக்களுக்கும், நம்முடைய சமூகத்திற்கும் மட்டுமே உதவ வேண்டும்" என்று கூறுவதில் ஒரு வகையான பெருமிதவுணர்வை இந்தப் பிரிவினர் பெறுகிறார்கள்.**

**எலீ வீஸல்**

மனிதர்கள் ஏன் ஒருவரையொருவர் வெறுக்கிறார்கள்? ஒருவரையொருவர் அழிப்பதற்காக மட்டுமே மனிதர்களை ஒன்று சேர்க்கும்படியாக வெறுப்பில் உள்ள தன்மை என்ன?

மூன்று வயது வரைக்கும் ஒரு குழந்தை வெறுப்புணர்வைக் கைக்கொள்ளாது. மூன்று வயதிலிருந்து தான் அது வெறுக்கத் தொடங்குகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், எப்படி வெறுக்க வேண்டும் என்பது அதற்குக் கற்றுத் தரப்பட்டு வந்திருக்கிறது.

வெறுப்பு என்றால் என்ன?

வெறுப்பு என்பது இனவெறி, மொழி வெறி, மதவெறி, அடிப்படைவாதம், பொறாமை, காழ்ப்பு, கசப்புணர்வு, தீவிர எதிர்ப்புணர்வு எல்லாம் தான். வெறுமே எதிர்மறைகளை நேர்மறைகளாக மாற்றியும் அல்லது நேர்மறைகளை எதிர்மறைகளாக மாற்றியும் இதை எளிதாகச் செய்துவிட முடியும். அப்படிச் செய்துவிட்டால், பின் எது நல்லதாக இருந்ததோ அது தீயதாக மாறிவிடும்.

இன்று உலகின் பல பகுதிகளில் அதீத மதவெறியும், அதீதப் பற்றுகளும், தீவிர மனப்போக்கும் புழக்கத்திலுள்ளன: மக்கள் மாசடைந்துவிட்டார்கள் என்பது உண்மைதான்.

அதேசமயம், சூரியனுக்குக் கீழே உலகத்திலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் நாம் இந்த வெறுப்பை வெவ்வேறு வழிகளில் எதிர்த்துப் போராட முயற்சி மேற்கொண்டு வருகிறோம் என்பதும் உண்மை. நல்ல கல்வியாளர்கள் சந்தித்துக் கொள்ளும் போதெல்லாம், அவர்கள் வெறுப்பை மறையச் செய்ய முயல்கின்றார்கள். ஒரு நல்ல பத்திரிகையாளர் சிறந்த எழுத்தாக்கம் ஒன்றைப் படைத்துக் கொண்டிருக்கும் போதெல்லாம், ஒரு தரமான பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் போதெல்லாம் அல்லது ஒரு சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியை வழங்கிக் கொண்டிருக்கும்··போதெல்லாம், அது வெறுப்புக்கு எதிரான வலுவான ஆயுதமாய் தன்னிச்சையாக மாறிக் கொண்டு விடுகிறது.

இன்று ஒரு இனவெறியாளனாய் இருப்பது அவமானத்திற்குரிய விஷயம். இன்னமும் நம்மிடையே ஏராளமான இனவெறியாளர்கள் இருக்கின்றார்கள் என்பது உண்மைதான். இனவெறிக் குழுக்கள் ஏராளமாக உள்ளன - என்றபோதும், இந்த நாட்டில் எந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு மனிதப் பிறவியை எடுத்துக் கொண்டாலும் அவன் அல்லது அவள் இனவெறியாளர் என்று அழைக்கப்பட்டால், அந்த அழைப்பு அவரை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதே இயல்பாக உள்ளதை உங்களால் காண முடியும்

மக்கள் வெறுப்பை விரும்பவில்லை. மோதலைத் தீர்ப்பது, பிரச்சினைத் தீர்வை எட்டுவது என்பது ஒரு அழகான கருத்தோட்டம். மிகவும் அவசியமானதும்கூட.

ஆனால், வெறுப்பு என்பது வேறு விஷயம். அது பகுத்தறிவுக் கொவ்வாதது, பகுத்தறிவுக்கொவ்வாத பிரச்சினைகளை, பகுத்தறிவுக்கொவ்வாத உட்தூண்டல்களைக் கையாள யார்தான் விரும்புவார்கள்?

இருந்தாலும், இந்த நூற்றாண்டில் நடந்தேறிய பல நிகழ்வுகளுக்கு இன்றும், சூரியனின் கீழுள்ள பலப்பல பகுதிகளில் நடந்து வரும் பல நிகழ்வுகளுக்கும் அடிப்படையாக, மூலாதாரமாக இருப்பது இந்த வெறுப்புதான்.

ஒருவரை வெறுக்கக் கூடிய ஆற்றல் இருந்தால் அது சம்பந்தப்பட்ட நபரிடம் ஒரு மிக வலுவான, வெறுக்கப்படுபவரைக் காட்டிலும் தானே மேலானவர் என்ற, "உயர்வு மனப்பான்மை'யை உருவாக்குகிறது. வெறுப்பவருக்கு மட்டுமே உண்மை தெரியும்; வெறுக்கப்படுபவருக்கு அதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்போ, ஆற்றலோ இல்லை என்ற விதமான மேலாதிக்க மனோபாவம்.


அவர் தன்னைப் பற்றிய உறுதியோடும் நம்பிக்கையோடும் இருக்க என்ன· அவமானப்படுத்த வேண்டியது, மதிப்பழிக்க வேண்டியது அவருக்கு இன்றியமையாததாகிறது. என்னை சிறைப் பிடித்து வைத்தால் மட்டுமே அவரால் தன்னை சுதந்திரமானவனாக உணர முடிகிறது. அப்படிச் செய்வது சம்பந்தப்பட்ட அந்த வெறுப்பாளருக்கு அவருடைய கண்ணெதிரே அளப்பரிய அதிகாரத்தைக் கொண்டு வந்து தருகிறது.

ஒரு வெறுப்பாளரைப் பொறுத்த வரை இந்த 'Seduction' என்ற விஷயம், அதாவது, தூண்டுதல், மனக்கிளர்ச்சியூட்டுதல் எல்லாம் இருக்கிறது. அந்த வெறுப்பாளருடைய ஏவல்களை நிறைவேற்றுவோருக்கும், அவருடைய ஆதரவாளர்களுக்கும் இந்த தூண்டியெழுப்பல், மனக்கிளர்ச்சியூட்டல் எல்லாம் தேவைப்படுகிறது.

வெறுப்பு என்பது நமக்குக் கற்றுத் தரும் மிக முக்கிய பாடம், வெறுப்பு என்பது அதற்கு ஆளாகிறவரை மட்டும் தான் அழிக்கிறது என்று கிடையாது. வெறுப்பைக் கைக்கொள்பவரையும் அது அழித்து விடுகிறது.

தேசியம் என்ற பெயராலும் பெரிய அளவு வெறுப்பும், பகைமையும் பிரசாரம் செய்யப்பட்டு, பரப்பப்பட்டு வருகிறது. "நான் மட்டுமே உண்மையைக் கைக்கொண்டிருக்கிறேன்" என்று யார் கூறினாலும் அவர் மற்றவர்களை வெறுப்பவராகி விடுகிறார் அல்லது மற்றவர்கள் அவரை வெறுப்பதற்கு காரணமாகி விடுகிறார்.

**வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்கள், வேறுவேறு துறைகளைச் சேர்ந்தவர்கள், வெவ்வேறு அக்கறைகள், விசுவாசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல தரப்பட்ட பிரிவினர், என்றாலும், எல்லோரும் ஒரே மேசையைச் சுற்றி அமர்ந்து, பேசுவது நம்மை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் பிரச்சினையை, பல ஆண்டுகளாக நம்மை அலைக்கழித்த படியிருக்கும் பிரச்சினையை, அதன் சிறு பகுதியையேனும் தீர்த்து வைப்பதில் உதவியே தீரும்.**






தேசியம் என்பதைப் பொறுத்த அளவிலும் இதுவே உண்மை நிலைவரம். என்னுடைய நாடு உங்களுடைய நாட்டைவிட அதிக முக்கியமானது என்றோ, என்னுடைய நாடு உங்களுடைய நாட்டை விட அதிகத் தகுதி வாய்ந்தது என்றோ நான் சொன்னால், அங்கே என்னிடம் உங்கள் மீதான வெறுப்பு வந்துவிடுகிறது.

இந்த வெறுப்புணர்விலிருந்து மனிதனுக்கு மீட்சி கிடைக்கச் செய்ய முடியும். இது எளிய காரியம்தான். இரண்டு தனி நபர்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் மதிப்போடும், மரியாதையோடும், ஒரு புன்சிரிப்போடும் நடத்திக்கொள்வது என்ற ஒரு எளிய உடன்படிக்கையை அவர்கள் எட்டிவிட்டாலே மீட்பும், நிவாரணமும் அவர்களுக்குச் சாத்தியமாகி விடுகிறது.

ஒரே மேசையைச் சுற்றி அமருமாறு மனிதர்களை நம்மால் ஒன்று சேர்க்க முடியுமானால், நிச்சயமாக ஏதாவது நல்லது நிகழும் என்று நான் தீர்மானமாக நம்புகிறேன்.

வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்கள், வேறுவேறு துறைகளைச் சேர்ந்தவர்கள், வெவ்வேறு அக்கறைகள், விசுவாசங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பல தரப்பட்ட பிரிவினர், என்றாலும், எல்லோரும் ஒரே மேசையைச் சுற்றி அமர்ந்து, பேசுவது நம்மை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் பிரச்சினையை, பல ஆண்டுகளாக நம்மை அலைக்கழித்தபடியிருக்கும் பிரச்சினையை, அதன் சிறு பகுதியையேனும் தீர்த்து வைப்பதில் உதவியே தீரும்.

வெறுமே மக்களை ஓரிடத்தில் திரட்டினாலே அப்படி ஓரிடத்தில் ஒன்று கூடுவதற்கான உத்வேகத்தை அவர்களிடம் ஏற்படுத்தினாலே போதும். அப்படி ஒன்றுகூடி, கலந்துரையாடி, மனம்விட்டுப் பேசச் செய்தால், பெயர் புகழுக்கான பிரயத்தனங்களோ, தம்பட்டங்களோ இல்லாத அளவில், அல்லது ஒரு வாய்ச் சண்டையை ஆரம்பிப்பதான, அல்லது தான் சொல்வதே சரி என்று வலிறுயுத்துவதான எத்தனங்களும், பிரயத்தனங்களும் இல்லாத அளவில் எல்லோரும் ஒன்று கூடி பிறர் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பதற்கும், வெளிப்படையாக, மனம் விட்டுப் பேசுவதற்குமான மனநிலை கொள்ளுமளவு மக்களிடையே ஆர்வத்தை உண்டாக்கிவிட முடிந்தால் அது ஒரு பெரிய அதிசய நிகழ்வாக இருக்கும்.

மிகவும் அழகான விஷயம் அது.

வெறுப்பு, மனித மனங்களை கறைபடியச் செய்கிறது. கயமையுணர்வுகளைக் கைக்கொள்ளச் செய்கிறது. வாழ்வு மதிப்புகளை வெறுப்பு களங்கப்படுத்துகிறது. மனிதரின் பார்வையை, காட்சிகளைக் களங்கப்படுத்துகிறது.

வெறுப்பு என்பது உண்மையில் ஒரு அழிவுச் சக்தி. அதுவே மரணம் என்ற நிலையை அது இன்னமும் எட்டிவிடவில்லை, என்றாலும் அது அழிக்கிறது, சேதப்படுத்துகிறது என்பதால் வெறுப்பு என்பது என்றுமே மரணத்திற்கு சேவகம் செய்தவாறே இருக்கும்.

வெறுப்பாளரைச் சுற்றிலும் வெறுப்பிற்காளாகியிருப்பவரைச் சுற்றிலும் லட்சக் கணக்கான மக்கள், கூட்டுச் சதிகாரர்களாகவோ அல்லது வெறுப்பிற்காளாகியிருப்பவர்களின் சக பலிகடாக்களாகவோ மாறவேண்டியிருக்கிறது.

தன்னிடம் குடிகொண்டுள்ள வெறுப்புணர்வு எந்த அளவுக்கு தன்னையே அழிக்கக் கூடியது என்பதை வெறுப்பாளர் - அவனோ, அவளோ - தெரிந்து கொண்டார்களென்றால் மூடப்பட்ட சுவரின் முதல் திறப்பிற்கு அது வழி வகுப்பதாக அமையும் என்று நான் கருதுகிறேன். அதாவது, தனது வெறுப்பை மேலும் தொடர்வதற்கு முன்பாக, அப்படிச் செய்யலாமா? வேண்டாமா என்று ஒருமுறைக்கு இரு முறையாக யோசிக்கத் தலைப்படுவார் வெறுப்பாளர்.

அதற்காக, வெறுப்பை வளர்த்து அரசியல் மற்றும் லாபங்களை அடைந்து கொள்கிறவர்களை மாறச் செய்துவிடலாம் என்று அர்த்தமல்ல. அவர்கள் தங்களுடைய வெறுப்பு உருவாக்குகையில் வெறித்தனமாக பற்றுறுதி கொண்டவர்களாயிருக்கிறார்கள். அவர்களை மாற்ற முயல்வது வீண் வேலை.

ஆனால், அத்தகைய வெறித்தனமான வெறுப்புணர்விற்கு இரையாகும் மக்கள் நம்மிடையே இருக்கிறார்கள். "நான் என்ற ஒன்று மட்டுமே நல்லது, சிறந்தது. எங்களுடைய குழு மட்டுமே அதி சிறந்தது. நாம் நம்முடைய இன மக்களுக்கும், நம்முடைய சமூகத்திற்கும் மட்டுமே உதவ வேண்டும்' என்று கூறுவதில் ஒரு வகையான பெருமித வுணர்வை இந்தப் பிரிவினர் பெறுகிறார்கள்.

அதில் தான் அபாயம் அடங்கியிருக்கிறது. வெறுப்பின் அபாயத்தை அந்த வெறுப்பைக் கைக்கொள்கிறவருக்கு விளக்கிக் கூறும் முயற்சியை, பிரயத்தனத்தை நாம் மேற்கொண்டால், ஒரு வேளை, "சுய-பாதுகாப்பு" காரணமாகவாவது நாம் ஏதேனும் சாதிக்க முடியலாம்.

# இந்தியாவின் கொள்கைகள் இலங்கைக்குத் தேவையில்லை

## தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் கொள்கைகளும் கட்டளைகளும் இன்றைய இலங்கைக்குத் தேவையில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு, கிழக்கை இணைக்கும் ஒரே நோக்கத்திலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

தமது கனவை நிறைவேற்றும் நோக்கில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளை இரா. சம்பந்தன் எம்.பி. தலைமையிலான தமிழ்க் கூட்டமைப்பு கூட்டுச் சேர்க்கின்றது. இந்தியாவின் தலையீட்டுடன் இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்தலாம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நினைக்குமாயின் அந்த எண்ணத்தை உடனடியாகக் கைவிட வேண்டும்.

இலங்கை விடயத்தில் இந்தியா தலையிட உரிமையில்லை.

அந்நிய நாடு என்ற காரணத்தினால் இலங்கை விடயங்களையும், இலங்கையின் தேசிய பிரச்சினைகளையும் இந்தியா தலையிட்டு தீர்த்துவைக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. இதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இந்தியாவும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதி சூழ்நிலையே தற்போதும் நிலவுகின்றது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நினைக்கின்றார். கூட்டமைப்பும் இந்திய மத்திய அரசிடம் சென்று யுத்தகால சூழ்நிலையைத் தெரிவித்திருக்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட வேண்டுமெனின் அதற்கான செயற்றிட்டங்களை இலங்கை அரசின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொ்ள்ளவேண்டும். அதாவது தீர்வு குறித்து ஆராய இலங்கை அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவேண்டும்.

இலங்கை அரசின் இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிராகரித்தால் நாடாளுமன்றத்தை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும் என்றார்.

## அலரிமாளிகையில் தர்ம போதனை



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் அலரி மாளிகையில் தர்ம போதனைகள் இடம்பெறுகின்றது. இந்த அடிப்படையில் 127 ஆவது தர்ம போதனை நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

பயாகலை ஸ்ரீதர்மகுப்த பிரிவனாவின் விகாராதிபர் வண. பயாகல நந்த ஸ்வாமின்திர தேரர் இந்த தர்ம போதனைகளை நிகழ்த்தினார். ஜனாதிபதியின் பாரியார் முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ உட்பட பல பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## போதனாசிரியர்களுக்கு நியமனம்

(கொழும்பு)

தேசிய விஞ்ஞான டிப்ளோமா போதனாசிரியர்கள் 229 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பத்தரமுல்லை இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சில் நடைபெற்றது கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் இடம் பெற்றது. வடக்கு, கிழக்கு பிரதேசம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் நோக்கில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

## கட்சித் தாவலுக்கு முடிவு கண்டது ஐ.தே.க.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஏனைய கட்சிகளில் இணைவோர் தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவை கட்சியின் பிரதித் தலைவராக்குவதற்கும், கட்சியில் இருந்து வெளியேறியவர்களை மீண்டும் இணைந்துக். கொள்ளுமாறும் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை அடுத்து இந்த விடயம் முடிவுக்கு வந்துள்ளதாக அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கட்சியை பலவீனப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியும் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முடிவை எச்சரிக்கையுடன் பார்ப்பதாக மேல் மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக்க குறிப்பிட்டுள்ளார்.

## டெங்கு ஒழிப்பு குறித்து இலங்கை கியூபா பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கும் கியூபாவிற்கும் இடையில் டெங்கு ஒழிப்பு குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கியூப வெளிவிவகார அமைச்சர் புருனோ எடுராடோ ரொட்ரிகஸ் பெரிலா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை உள்ளிட்ட பலவேறு சர்வதேச விடயங்களில் இலங்கைக்கு கியூபா ஒத்துழைபபு வழங்கி வருவதாகவும் அதற்கு நனறி பாராட்டுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு உதவிகளை வழங்க விரும்புவதாக கியூப அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு விசேடமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் ஆபத்தான சூழ்நிலை நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் இந்த சந்திப்பின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## தேசிய விவசாய வாரம் மாத்தறையில் நேற்று ஆரம்பம்



(கொழும்பு)

2014 தேசிய விவசாய வாரம மற்றும் விவசாய கண்காட்சி மாத்தறை தெலிஜ்ஜவிலை விவசாய ஆராயச்சி பயிற்சி நிலையத்தில் நேற்று ஆரம்பமாகியது.

இந்த கண்காட்சி எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நடைபெறும். வெறுமனே கண்காட்சியோடு மட்டும் நின்று விடாமல் விவசாயத்துடன் தொடர் புடைய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து விவசாயத்துறையில் மேற் கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கை மூலம் மாவட்டங்களில் விவசாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே இம்முறை தேசிய விவசாய வாரம் மற்றும் விவசாய கண்காட்சியின் நோக்கமாகும் என விவசாய அமைச்சு தெரிவிக்கின்றது.

பாடசாலைகளில் அமைக்கப்பட்ட விவசாய தோட்டங்களில் சிறந்த தோட்டங்களுக்கான பரிசளிப்பு மற்றும் விவசாய கருத்துக்கள் என்பனவும் இந்த விவசாய வாரத்தில் இடம்பெறவுள்ளன.

## நூதனசாலைக்கு சென்றது இலங்கை அகதிகளின் படகு

(கொழும்பு)

இலங்கை அகதிகளை கடந்த வருடம் அவுஸ்ரேலியாவுக்கு ஏற்றிவந்த மரங்களால் செய்யப்பட்ட படகு ஒன்று மேற்கு அவுஸ்ரேலிய நூதனசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகள் 66 பேரை ஏற்றி வந்த இந்த படகு கடந்த வருடம் ஏப்ரல் 9 ஆம் திகதி வடக்கு பேர்த்தை சென்றடைந்தது.

இந்த படகு எல்லைப் படையினரின் கண்காணிப்புக்கு அப்பால் எவ்வாறு சுறுசுறுப்பான கெரால்டன் துறைமுகத்துக்கு வந்தது என்பது பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் குறித்த படகை பாதுகாக்க முடியாமையை தொடர்ந்து அதனை நூதன சாலைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

## அஞ்சல் வாக்களிப்பதற்கு இறுதிச் சந்தர்ப்பம்

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்குரிய அஞ்சல் வாக்கை அடையாளமிடும் தினம் நாளை வரை நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அஞ்சல் வாக்கை அடையாளமிடும் தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த செப்ரெம்பர் 04 மற்றும் 05 ஆம் திகதிகளில் அஞ்சல் வாக்கை அடையாளமிடாதுபோன வாக்குகளை வாக்களிப்பதற்கே நாளை வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை அலுவலக நேரத்தினுள் குறித்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகங்களிலும், கொழும்பு மாவட்ட தேர்தல்கள் செயலகங்களிலும் வாக்குப்பதிவு செய்யும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வஞ்சல் வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஈடுபடுத்தப்படும் உத்தியோகபூர்வ கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக போட்டியிடும் அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் முகவர்கள் மற்றும் அதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அமைப்புக்களின் கண்காணிப்பாளர்களே அவர்களது முகவர்களாக கலந்துகொள்ள முடியும்.

இத்தினம் எந்தவொரு விதத்திலும் மேலும் கால நீடிப்புச் செய்யப்பட மாட்டாது எனவும், அஞ்சல் வாக்கை அடையாளமிடுவதற்காக தேசிய அடையாள அட்டை, அல்லது செல்லு படியாகும் அடையாள அட்டைகளாக தேர்தல் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அடையாள அட்டையொன்றை எடுத்து வருதல் வேண்டும் எனவும் தேர்தல்கள் செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

## உயர் கல்வி அமைச்சரின் வீட்டில் ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் திறைசேரி

(கொழும்பு)

ஹங்குராங்கெத்தவில் அமைந்துள்ள உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் வீட்டை, தொல்பொருள் திணைக்களம் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீடு அமைந்துள்ள நிலப்பரப்பை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் பகுதியாக அறிவிக்கப்பட உள்ளது.

குறித்த வீட்டையும் காணியையும் தொல்பொருள் திணைக்களம் ஏற்கனவே சுவீகரித்துக் கொண்டுள்ளதாக, தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

விரைவில் இந்தக் காணிகளில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறித்த வீட்டை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாக அறிவிப்பதற்கு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்த வீடு அமைந்துள்ள பகுதியில் இரண்டாம் ஸ்ரீ ராஜசிங்க மன்னரின் திறைசேரி காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திறைசேரிப் பகுதியை கண்டுபிடிக்கும் நோக்கில் விரைவில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத குற்றச்செயல்களை தடுக்க

## விசேடபொலிஸ் குழு நியமனம்

(வடமராட்சி)

மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறை ஏற்படுத்துவோர், சட்டவிரோத மதுபான விற்பனைகளில் ஈடுபடுவோருக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்பிரதிப் பொலிஸமா அதிபர் எஸ்.ரோஹன டயஸ் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் பொலிஸ்மா அதிபர் இதனை ஆராய்வதற்கென விசேடபொலிஸ் குழுவையும் நியமித்துள்ளார்.

இவ்விசேட பொலிஸ் குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக பொலிஸ் குழுவினர் யாழ்.நகரப்பகுதியில் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த 5 பேர் பிடிபட்டனர்.

வாகனமொன்றில் சட்டவிரோதமாக சாராயம் கொண்டு சென்ற நபர்கள் அகப்பட்டுள்ளதுடன் வானையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். மேலும் மதுபான விற்பனை நிலையங்கள் 9 மணியுடன் மூடப்படவேண்டும் என்றும் மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கும் பொதுமக்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் சட்டவிரோதமான செயல்களை தடுப்பதற்குமே பொலிஸ்மா அதிபரினால் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (01)

## ஞானச்சுடர் வெளியீடு



தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் 200 ஆவது ஞானச்சுடர் சஞ்சிகை மலர் வெளியீடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சஞ்சிகை வெளியீட்டுரையை க.ஸ்ரீசந்திரன் மதிப்பீட்டுரையை க.நடேசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (51)

## மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இரண்டு மாடிக்கட்டடம் அமைக்க ஏற்பாடு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

கல்லூரியின் பழைய மாணவர் ஸ்ரீரஞ்சன் நடேசன் தனது தந்தையின் நினைவாக இந்த இரண்டு மாடி கட்டடங்களை அமைத்து கல்லூரிக்கு வழங்கவுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

ஒவ்வொரு தளத்திலும் தலா 6 வகுப்பறைகளுடன் இக்கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் 60 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்டதாக நவீன வசதிகள் கொண்டமைந்ததாக இந்த கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றதாகவும், அடிக்கல்லை கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவர் எஸ்.விவேகானந்தராஜா நாட்டி வைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சம்புநாத ஈஸ்வரத்தில் முழுமதி யாகம்



(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் - சம்பில்துறை சம்புநாதஈஸ்வரத்தில் பௌர்ணமி தினமான நேற்று முன்தினம் திங்கட்கிழமை முழுமதி யாகம் இடம் பெற்றது.

சைவ மகா சபை மற்றும் சிவதொண்டர் அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஆலய குரு முதல்வர் நரசிங்க சித்தர் தலைமையில் இந்த யாகம் இடம்பெற்றது.

சிவத்தமிழ் அர்ச்சகர்கள் செந்தமிழ் திருமுறையில் இந்த யாகத்தை நடத்தினர்.

சுழிபுரம், பாண்டவெட்டை, பெரியபுலோ, கல்விளான், பொன்னாலை, பனிப்புலம் ஆகிய இடங்களில் இருந்து வருகை தந்த அறநெறி மாணவர்களும் மக்களும் இந்த யாகத்தில் கலந்து கொண்டனர். சைவ மகா சபை மற்றும் சிவதொண்டர் அமைப்பு ஆகியன மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவருகின்ற யாகத்தின் தொடர்ச்சியாகவே இந்த யாகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(48)

## ஆலோசனைக் கூட்டம்

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள பாரம்பரிய சித்த வைத்தியர்கள் பாதுகாப்புச் சபையின் ஆலோசனைக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு க.ஜெயச்சந்திரமூர்த்தி தலைமையில் வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (51)




## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்



# இரட்டையரில் அசத்தும் சகோதரர்கள்

அமெரிக்க ஓப்பன் ஆண்கள் இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் பொப் பிரையன் - மைக் பிரையன் சகோதரர்கள் 5ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று ரிச்சர்ட் சியர்ஸ் - ஜேம்ஸ் வைட் ஜோடியின் சாதனையை சமன் செய்தனர். இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் மார்செல் கிரானோலர்ஸ் - மார்க் லோபஸ் ஜோடியுடன் மோதிய பிரையன் சகோதரர்கள் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை கைப்பற்றினர். 16ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ள அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக இது 100ஆவது சம்பியன் பட்டம் (ஏ.டி.பி. தொடர்கள் உட்பட) என்பது குறிப்பிடத்தக்கது.

# குரோஷிய வீரருக்கு முதல் மகுடம்


(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் இறுதிப் போட்டியில் ஜப்பானின் கெய் நிஷிகோரியை தோற்கடித்து குரோஷியாவின் மரின் சிலிச் பட்டம் வென்றார்.

4 வகையான கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் 11ஆம் நிலை வீரர் ஜப்பானின் கெய் நிஷிகோரியும், 16ஆம் நிலை வீரர் குரோஷியாவின் மரின் சிலிச்சும் மோதினர்.

24 வயதான நிஷிகோரியும், 25 வயதான மரின் சிலிச்சும் தங்களது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்திற்காக மல்லுக்கட்டினர். ஆனால் மரின் சிலிச் 6-3, 6-3, 6-3 என்ற நேர் செட்டில் கெய் நிஷிகோரியை வீழ்த்தி அமெரிக்க ஓப்பன் பட்டத்தை வென்றார். அரையிறுதியில் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்த ஜப்பானின் கெய் நிஷிகோரி, மரின் சிலிச்சுவிடம் தோல்வியை தழுவினர்.

2007ஆம் ஆண்டு முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பங்கேற்று வரும் மரின் சீலிச் கிராண்ட்ஸ்லாம் போட்டி ஒன்றில் பட்டம் வென்றது இதுவே முதல் முறையாகும்.



# அஜ்மலுக்கு தடை; விதித்தது ஐ.சி.சி.

பாகிஸ்தான் சூழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் பந்து வீசுவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் பந்து வீசும் முறை தொடர்பாக பல்வேறு புகார்கள் எழுந்தன. சமீபத்தில் இலங்கைக்கு எதிராக நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியின் போது பாகிஸ்தான் வீரர் அஜ்மல் வீசிய 35-40 பந்துகள் பந்து வீச்சு விதிமுறைகளை மீறியதாக இருந்தது என்று ஐ.சி.சி. நடுவர்கள் புகார் தெரிவித்தனர். இதனையடுத்து அவரது பந்து வீச்சு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பரிசோதனையில் சயிட் அஜ்மல் பந்து வீசும் முறை விதிமுறைகளுக்கு மாறானது என கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அவர் பந்து வீசுவதற்கு தடை விதிக்கப்படுகிறது என்று சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிப்படி பந்து வீசும்போது 15 டிகிரி அளவுக்குத்தான் கையை வளைக்க வேண்டும் அதற்கு மேல் இருந்தால் அது விதிமுறைகளுக்கு முரணானது. ஆனால் அஜ்மல் பெரும்பாலும் 23.5 டிகிரி வரை கையை வளைத்து பந்து வீசுகிறார். பந்து வீசும்போது சயிட் அனுமதிக்கப்பட்ட 15 டிகிரி அளவுக்கு மேலாக கையை வளைத்து வீசியது தெரியவந்துள்ளது. என்று சர்வதேச கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது. முன்னதாக 2009ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் பந்து வீசியபோது, போட்டி அதிகாரிகள் அவரது பந்து வீச்சு முறை சரியில்லை என்று தெரிவித்தனர். இதையடுத்து பந்து வீச்சு வல்லுநர்களின் உதவியுடன் பந்து வீச்சு முறையில் சிறிய மாற்றத்தைக் அஜ்மல் ஏற்படுத்திக் கொண்டார். பின்னரும் அவரது பந்து வீச்சு தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் வெடித்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆஸி. அணி அறிவிப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் அவுஸ்ரேலிய அணியில், சகலதுறை வீரர் மிட்சல் மார்ஷ், சுழற்பந்துவீச்சாளர் ஸ்டீவ் ஓகீபி அறிமுக வீரர்களாக தேர்வு செய்யப்பட்டனர். அத்துடன் ருவென்ரி-20 கப்டன் ஆரோன் பின்ஞ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.,) அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் அணிகள், ஒரு சர்வதேச ருவென்ரி-20 (ஒக்., 5), மூன்று ஒரு நாள் (ஒக்., 7, 10, 12), இரண்டு டெஸ்ட் (ஒக்., 22-26 மற்றும் ஒக்., 30-நவ., 3) போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இத்தொடரில் பங்கேற்கும் அவுஸ்ரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

ருவென்ரி-20 அணிக்கான கப்டன் பொறுப்பிலிருந்து ஜோர்ஜ் பெய்லி விலகியதால், புதிய கப்டனாக ஆரோன் பின்ஞ் நியமிக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் அணி: டேவிட் வோர்னர், கிறிஸ் ரோஜர்ஸ், அலெக்ஸ் டூலன், மைக்கல் கிளார்க் (கப்டன்), ஸ்ரீபன் ஸ்மித், ஷேன் வட்சன், பிலிப் ஹியுஸ், பிரட் ஹடின், மைக்ஸ்வெல், மிட்சல் மார்ஷ், ஜோன்சன், பீற்றர் சிடில், ஸ்டார்க், நதன் லியன், ஸ்டீவ் ஓகீபி.

ஒருநாள் அணி: மைக்கல் கிளார்க் (கப்டன்), சீன் அபாட், ஜோர்ஜ் பெய்லி, ஜேம்ஸ் பால்க்னர், ஆரோன் பின்ஞ், ஹட்ன், நதன் லியன், மிட்சல் மார்ஷ், மைக்ஸ்வெல், ஜோன்சன், ஸ்மித், ஸ்டார்க், வோர்னர், ஷேன் வட்சன்.

ருவென்ரி-20 அணி: ஆரோன் பின்ஞ் (கப்டன்), சீன் அபாட், கமிரான் பாய்சி, பட் கம்மின்ஸ், ஜேம்ஸ் பால்க்னர், பிரட் ஹடின், மார்ஷ், மைக்ஸ்வெல், கனே ரிச்சர்ட்சன், ஸ்மித், ஸ்டார்க், வோர்னர், வட்சன்.

# தோழியைக் கரம்பிடிக்கும் முன்னாள் ரென்னிஸ் மங்கை



செக்கோசுலோவாக்கியாவில் பிறந்து அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் குடியேறி வசித்து வருபவர் முன்னாள் ரென்னிஸ் நட்சத்திர வீராங்கனை மார்டினா நவரத்திலோவா. ஓரின சேர்க்கையாளரான (லெஸ்பியன்) நவரத்திலோவா, ஜூடி நெல்சன் என்ற பெண்ணுடன் 7 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்து விட்டு கடந்த 1991ஆம் ஆண்டில் பிரிந்தார்.

தற்போது 57 வயதான நவரத்திலோவா, 42 வயதான ரஷ்ய முன்னாள் அழகியும், தொழில் அதிபருமான ஜூலியா லெமிகோவாவுடன் கடந்த 6 ஆண்டுகளாக ஒன்றாக வசித்து வருகிறார். இவர்களது நிச்சயதார்த்தம் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் ஆண்கள் அரையிறுதி ஆட்டத்தின் போது மைதானத்தில் நடைபெற்றது.

இது அங்குள்ள திரையில் காட்டப்பட்டது. அப்போது இரசிகர்கள் கரவொலி எழுப்பினார்கள். என்னை திருமணம் செய்ய விருப்பமா? என்று நவரத்திலோவா விடுத்த வேண்டுகோளை ஜூலியா ஏற்றுக்கொண்டார். இதைத் தொடர்ந்து நவரத்திலோவா, ஜூலியாவுக்கு வைர மோதிரம் அணிவித்தார். புளோரிடாவில் ஓரின சேர்க்கையாளர் திருமணத்துக்கு அனுமதி கிடையாது. இதனால் இருவரும் மியாமியில் தங்கள் திருமணத்தை விரைவில் நடாத்தலாம் என்று முடிவு செய்திருக்கின்றனர்.

# களத்திற்கு வெளியில்...

இங்கிலாந்து மண்ணில் ஒருநாள் தொடரை வென்றது மிகப்பெரிய சாதனையாகும். டெஸ்ட் தொடரை இழந்த பின் ஒருநாள் தொடரில் இந்திய வீரர்கள் சிறப்பாக செயற்பட்டனர். நான் எதிர் பார்த்ததை விட அதிகமாக இந்திய வீரர்கள் செயற்பட்டனர். அணிக்கு பிளட்சர்தான் பயிற்சியாளர். அவர் பல்வேறு விடயங்களை கையாண்டார். 100 டெஸ்ட்களில் பயிற்சியாளராக இருந்து சாதனை புரிந்தவர். அற்புதமான பயிற்சியாளர் பல்வேறு விடயங்களில் திறமையானவர். அவரை நான் மிகவும் மதிக்கிறேன். அவருக்கு ஆதரவாக கிரிக்கெட் சபையிடம் நான் பேசுவேன்.

**ரவிசாஸ்திரி (இந்தியா)**

அவுஸ்ரேலிய ருவென்ரி – 20 அணிக்கு புதிய கப்டனாக என்னை நியமித்ததில் பெருமை அடைகிறேன். ஒவ்வொரு இளம் வீரர்களுக்கும், தங்களது தேசிய அணிக்கு கப்டனாக செயற்பட வேண்டும் என்ற விருப்பம் இருக்கும். எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது ஆச்சர்யம் அளிக்கிறது. சிறந்த கப்டன்களான மைக்கல் கிளார்க், ஜோர்ஜ் பெய்லி ஆகியோரின் தலைமையின் கீழ் விளையாடி உள்ளேன். இவர்களிடம் இருந்து நிறைய விடயங்களை கற்றுக் கொண்டுள்ளேன். இது, போட்டியில் சிறந்த கப்டனாக செயற்பட உதவும் என நம்புகிறேன்.

**ஆரோன் பின்ஞ் (அவுஸ்ரேலியா)**

கிறிஸ் எவெர்ட், மார்டினாவுடன் இணைவதால், 18ஆவது கிராண்ட்ஸ்லாம் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. இந்த பட்டத்தை பெற நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. கடைசியாக அது என் தோள்களுக்கு வந்து சேர்ந்து விட்டது. அடுத்ததாக 19ஆவது கிராண்ட்ஸ்லாம் வெல்ல ஆவலுடன் உள்ளேன். அடுத்தடுத்து கிராண்ட்ஸ்லாம் எண்ணிக்கையை அதிகரிக்க என்னால் முடிந்தவரை போராடுவேன். விம்பிள்டனில் மூன்றாவது சுற்றில் தோல்வியடைந்த பின் மிகவும் ஏமாற்றம் அடைந்தேன். ஏனெனில் அங்கு கடினமாக முயன்றேன். பயிற்சி, பயிற்சி, பயிற்சி என ஆறு மணி நேரத்துக்கும் மேலாக பயிற்சி மேற்கொண்டேன். சாதகமான முடிவு வரும் அளவுக்கு நாம் பயிற்சி மேற்கொள்ளவில்லை என்பது அதன்பின்னரே புரிந்தது. பின்னர், புதிய முறையில் பயிற்சி மேற்கொள்ள முடிவு செய்தேன். ஒவ்வொரு நாளும் பயிற்சி செய்தேன். ஆனால், முன்புபோல அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. அப்போதுதான் மிகவும் மன அழுத்தத்தில் இருப்பதும், சிறிது ஓய்வாக இருக்க வேண்டும் என்பதும் புரிந்தது.

**செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா)**

செரீனாவை வீழ்த்த ஒரு திட்டம் வைத்திருந்தேன். ஆனால், அதை செயற்படுத்த முடியவில்லை. களத்துக்குள் நுழையும்போது சிறிது பதற்றம் இருந்தது. இரசிகர்கள் உரக்க சத்தமிடுகையில் நாம் என்ன நினைக்கிறோம் என்பதே மறந்து விடுகிறது. இதுவும் ஒருவகை பதற்றமே. வலைக்கு அந்தப் பக்கம் இருந்தவர் (செரீனா) எனக்கு அச்சுறுத்தலாக இருந்தார். அவர் போராட்ட குணத்துடனும், என்னை விட சிறப்பாகவும் ஆடினார். இறுதிச் சுற்று தவிர்த்து, கடந்த இரண்டு வாரங்களில் இங்கு நன்றாகவே ஆடினேன். இதற்கு முன் செரீனாவை மூன்று முறை வீழ்த்தியுள்ளேன். ஆனால், மூன்று முறை எனக்கு அதிர்ஷ்டம் கிடைத்ததாகத் தெரிவித்தனர். அந்த அதிர்ஷ்டம் இன்றும் கிடைக்கும் என நம்பினேன். ஒரு வேளை நான்காவதாக அந்த அதிர்ஷ்டம் அடுத்த முறை கிடைக்கலாம்.

**வோஸ்னியாக்கி (டென்மார்க்)**

6 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுப்பது என்பது எப்பொழுதும் கடினமான காரியமாகும். முதல் பந்தில் சிக்சர் அடித்தேன். 4ஆவது பந்தை பவுண்டரிக்கு விரட்டினேன். இருப்பினும் கடைசி 2 பந்தை எதிர்கொள்கையில் நெருக்கடி இருந்தது. நான் அடித்து ஆட முயற்சித்தேன். ஆனால் பந்து துடுப்பில் சரியான இடத்தில் சிக்கவில்லை. பந்து கால் விரலில் உரசியபடி துடுப்பில் பட்டதால் அதிரடியாக அடித்து விளையாட முடியவில்லை. அம்பத்தி ராயுடு அடித்து ஆடக்கூடிய திறமை கொண்ட வீரர் தான். இருப்பினும் அவர் அப்போது தான் களமிறங்கியிருந்தார். இதனால் அதிக பந்துகளை எதிர்கொள்ளாத அவர் வந்த உடனே அடித்து ஆடுவது கடினம் என்று கருதி கடைசி ஓவரில் எல்லா பந்துகளையும் நானே எதிர்கொண்டு அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்லலாம் என்று முடிவு செய்து ஆடினேன். ஆனால் நான் நினைத்தபடி நடக்கவில்லை. எனவே இந்த தோல்விக்கான முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**டோனி (இந்தியா)**

# கிண்ணம் வென்றது குருநகர் பாடுமீன்

(அரியாலை)

அரியாலை சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை குருநகர் பாடுமீன் அணி கைப் பற்றிக்கொண்டது.

16 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இக்கால்பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 3ஆம் திகதி அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும் குருநகர் பாடுமீன் அணியும் மோதின. இரு அணிகளுமே தங்கள் முழுப் பலத்தையும் பிரயோகித்து முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளுமே மாறி மாறி பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன் கோல்களையும் பெற்றுவந்தன: இருப்பினும் இறுதி நேரத்தில் எழுச்சியுற்ற பாடுமீன் அணி போட்டியில் முழு ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் பாடுமீன் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

## பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

# வவுனியாவை வீழ்த்தியது மட்டக்களப்பு

(வவுனியா)

பிறிமா வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்றில் மட்டக்களப்பு மாவட்ட அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை சங்கத்தினால் நடாத்தப்படும் மாவட்ட அணிகளுக்கிடையிலான பிறிமா வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. 15 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற அணிகள் பங்குபற்றுகின்றன.

இதில் மட்டக்களப்பு மற்றும் வவுனியா மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த சனிக்கிழமை வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மட்டக்களப்பு அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அலெக்ஷன் 100, நிலுக்சாந் 95, றுசாந் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாக தாண்டிகா நான்கு, றுசாந்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 304 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வவுனியா மாவட்ட அணி 40.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் உசாந்தன் 44, சங்கீத் 18, பிரபோதயா 15, நிருஜன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றுகான் நான்க, நிஸ்நாத் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்ட அணி 156 ஓட்டங்களால் பெருவெற்றிபெற்றது. (12)

# வண்ணை கலியூட்டர் படுதோல்வி

(வண்ணை)

வண்ணை கலியூட்டர் அணியுடனான ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் டெறிபேர்க் ஸ்ரார் 169 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டி கடந்த வாரம் வண்ணை கலியூட்டர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணய சுழற்ச்சியில் வென்று முதலில் ஆடிய டெறிபேர்க் ஸ்ரார் அணி 40 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரவின் 55, மார்க்சிங் 64, சுவிந்தன் 58 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 267 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வண்ணை கலியூட்டர் அணி 18.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் லிங்கநாதன் 25 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய அனைத்துத் துடுப்பாட்ட வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ரதீஸ் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# மருதனார்மட வாழ்வகம் முதலிடம்



(சுன்னாகம்)

சுன்னாகம் - மருதனார்மடம் வாழ்வகம் நிறுவனத்தின் நிறுவுநர் கலாநிதி அன்ன லட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக விழிப்புலனற்றோர்களுக்கிடையில் வட மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட தடகள விளையாட்டு போட்டிகளில் 303 புள்ளிகள் பெற்று மருதனார்மடம் வாழ்வக நிறுவனம் சம்பியனாகியது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்போட்டி நடைபெற்றது.

விழிப்புலனற்றோருக்காக முதன் முறையாக இந்த் தடகள போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

இந்த தடகள போட்டிகளில், யாழ்ப்பாணம் மருதனார்மடம் வாழ்வக நிறுவனம், யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கம், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம், வவுனியா கொந்தக்காறன் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வவுனியா ஓகன் நிறுவனம், வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் ஆகியவற்றின் வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

இந்த தடகள போட்டிகளில், 303 புள்ளிகள் பெற்று வாழ்வக நிறுவனம் முதலிடத்தையும், 134 புள்ளிகள் பெற்று புதுக்குடியிருப்பு இனிய பாரதி இல்லம் இரண்டாமிடத்தையும், 48 புள்ளிகள் பெற்று யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

# தேசிய விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபை உருவாக்கம்

இலங்கையில் முதல் தடவையாக தேசிய விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபை ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இலங்கையில் விளையாட்டுத்துறை சங்கங்களில், சங்கங்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணும் வகையில் தேசிய விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபை ஸ்தாபிக்கப்படவுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச கால்பந்தாட்ட சங்கங்களின் சம்மேளன (பீபா பொதுச் செயலாளர் ஜெரோம் வெல்கி தலைமையிலான பிரதிநிதிகள் முன்வைத்த யோசனைக்கு அமைய விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபையை ஸ்தாபிக்க இணங்கியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர், விளையாட்டுத்துறை அமைச்சு அதிகாரி,தேசிய ஒலிம்பிக் குழுப் பிரதிநிதி ஆகிய உறுப்பினர்களைக் கொண்டதாக தேசிய விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபை அமையும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்தார். சர்வதேச கால்பந்தாட்ட சங்கங்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜெரோம் வெல்கி தலைமையிலான குழுவினர், விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயை அமைச்சில் கடந்த திங்கட்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடியபோது நியாயாதிக்க சபையை ஸ்தாபிப்பது தொடர்பான இணக்கப்பாடு காணப்பட்டது. தேசிய விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபை ஸ்தாபிக்கப்படுவதன் மூலம் விளையாட்டுத்துறையில் புதியமாற்றங்களை கொண்டு வர முடியும் என்பதை சர்வதேச கால்பந்தாட்ட சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் எடுத்துக் கூறினார்.

இந்த சபை ஸ்தாபிக்கப்படுவதன் மூலம் விளையாட்டுத்துறை சார் விடயங்கள் அரசியல் தலையீடின்றி இயங்குவது உறுதிசெய்யப்படும் என உலக சம்மேளனப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். அத்துடன், ஒவ்வொரு விளையாட்டுத்துறை சங்கங்களுக்கும் சம்பளம் வழங்கப்படும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு அமைச்சரிடம் சர்வதேச கால்பந்தாட்ட சங்கங்களின் சம்மேளன பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

சில விளையாட்டுத்துறை சங்கங்களில் சம்பளம் வழங்கப்படும் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாக பதிலளித்த அமைச்சர் மகிந் தானந்த அளுத்கமகே, அதற்கான ஏற்பாடுகளை செய்வதாக உறுதியளித்தார். இந்தக் கலந்துரையாடலின் போது, சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகள் சிலவற்றை இலங்கையில் நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அமைச்சர் கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.

ஆசிய மட்டத்திலான தகுதிகாண் போட்டிகள் சிலவற்றை இலங்கையில் நடத்த முடியுமா? என்பது குறித்து ஆராய்ந்து ஒரு நல்ல முடிவை எடுப்பதாக சம்மேளனப் பிரதிநிதிகள் கூறினர். இந்தக் கலந்துரையாடலின்போது சர்வதேச கால்பந்தாட்ட சங்கங்களின் சம்மேளன பிரதிநிதிகளுக்கு நினைவுச் சின்னங்ளை அமைச்சர் வழங்கினார்.




மாதகல் நாவலர் புயல் விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியைக் காணலாம். அண்மையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கந்தர்மடம் வின்னர்ஸ் அணி கைப்பற்றிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**3**

- சுப்பராஜன் [வானவில் இதழ்]







ஜே.வி.பி.யின் 5 அரசியல் வகுப்புகளில் ஒன்று பொருளாதாரம் பற்றியது. (இந்தக் கட்டுரையாளர் வவுனியாவில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் கோழி வளர்ப்பது பற்றிய கருத்தரங்கம் என்ற போர்வையில் நடாத்தப்பட்ட ஜே.வி.பி.யின் அரசியல் வகுப்பில் நேரடியாகக் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது) அதில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிரான கருத்துகள் முன்வைக்கப்பட்டன. சிங்கள மக்களின் முன்னோடிகள் ஏகாதிபத்திய வாதிகளுக்கு - குறிப்பாக பிரித்தானிய - எதிராகப் போரிட்ட வரலாறும் உணர்ச்சி மிகுந்த பாணியில் சித்திரிக்கப்பட்டது.

இந்த வகுப்புகளில் மிக முக்கியமான ஒரு வகுப்பு "இந்திய விஸ்தரிப்புவாதம்" பற்றியது. உண்மையில் இந்தப் பதம் சீனாவின் ஊடகங்களால் 1962இல் நடைபெற்ற இந்திய - சீன எல்லை யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்டதாகும். அந்தச் சொற்பதத்தை இலங்கையில் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் இந்தியாவ்வுக்கு எதிரான தமது பிரசாரங்களில் பயன்படுத்தி வந்தனர். அவர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியதின் நோக்கம், இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பின்பற்றி வந்த தேச விஸ்தரிப்பு வாதக் கொள்கையை விமர்சிப்பதற்காகவே.

ஆனால் முன்னர் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருந்த விஜேவீர அந்தச் சொற்பதத்தை வேறு நோக்கத்துக்காக - அதாவது தனது சிங்களக் குறுந் தேசியவாத நோக்கத்துக்காகப் பயன்படுத்த ஆரம்பித்தார். அவர் இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், அதேநேரத்தில் 20ஆம் நூற்றாண்டின் நவீன கொத்தடிமைகளாகவும் இருந்த இந்திய வம்சாவழி மலையகத் தோட்டத் தொழிலாளர்களை குற்றம்சாட்டுவதற்காக அதைப் பயன்படுத்தினார்.

அதாவது இந்தியாவுடன் எவ்வித பௌதீகத் தொடர்புகளும் அற்ற, அதேநேரத்தில் வெறும் கலாசார மற்றும் உணர்வுரீதியிலான தொடர்புகளை மட்டும் வைத்திருந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பார்த்து "இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கைக்கூலிகள்" என மிகவும் அபாண்டமான, மன்னிக்க முடியாத ரீதியில் ஜே.வி.பி குற்றம்சாட்டியது.

(அதனால்தான் பிற்காலத்தில் இ.சந்திரசேகரன் என்ற இந்திய வம்சாவழித் தமிழர் ஒருவரை ஜே.வி.பி. தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்து, அவர் மலையக மக்களுக்கென ஒரு தொழிற்சங்கத்தை அமைத்த போதும், இன்றுவரை மலையகப் பகுதிகளில் ஜே.வி.பியால் செல்வாக்குப்பெற முடியாமல் இருக்கின்றது).

தமிழ் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாவிட்டாலும் சாதாரண சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஜே.வி.பி.யின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

அதற்கு இன்னொரு காரணம் 1970ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஜே.வி.பி. சிறீலங்கா - சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டமைப்பான "மக்கள் முன்னணி"க்கு வேலை செய்திருந்ததால், அதன் மூலம் ஐ.தே.க.வுக்கு எதிரான மக்கள் மத்தியில் அது பரவலான தொடர்புகளைப் பெற்றிருந்தது. அத்தேர்தலில் மக்கள் முன்னணி பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்று அமோக வெற்றியீட்டியிருந்தது.

ஆனால் ஜே.வி.பி தேர்தலில் வேலை செய்திருந்தாலும் அதன் தலைமையின் முழுநோக்கமும் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றின் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகவே இருந்தது.

ஜே.வி.பி.யின் இந்த நோக்கம் குறித்தும், அதற்காக அது செய்து வரும் தயாரிப்புகள் குறித்தும் அரசாங்கமோ, ஏனைய அரசியல் கட்சிகளோ பாரதூரமாக எடுக்காமல் இருந்து வந்தன.


ஆயுதப்போராட்டம் குறித்து தீவிரமாகப் பேசிவந்த சண்முகதாசன் கூட அதைப் பெரிதாக எடுக்கவில்லை. அவர் ஒருமுறை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசும்போது, அவரிடம் ஜே.வி.பி.யின் வளர்ச்சி பற்றி சில மாணவர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் சொன்ன பதில், "ஜே.வி.பி.யினர் ஒரு கல்லைக் கூடத் தூக்கியெறிய லாயக்கற்றவர்கள்" என்பதாகும்!

அதேபோல அவர் யாழ்ப்பாணத்தில் கட்சி உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றில் பேசும்போதும் இதுபற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கும் அவர் சொன்ன பதில், "தென்னிலங்கையில் ஜே.வி.பி. என்றொரு இயக்கம் பலமானதாக இல்லை. முதலாளித்துவப் பத்திரிகைகள்தான் எமது செல்வாக்கை மட்டம் தட்டுவதற்காக ஜே.வி.பி. பற்றிய செய்திகளை ஊதிப் பெருப்பித்து செய்தி வெளியிடுகின்றன" என்பதாகும்!!

ஆனால் பொலிசார் ஜே.வி.பி. மீது ஒரு கண் வைத்துக்கொண்டே இருந்து வந்தனர். அதனால்தான் ஜே.வி.பி. ஒரு திட்டமிட்ட முழுமையான தாக்குதலை நடாத்துவதற்கு சில நாட்கள் முன்னதாக - அதாவது 1971 ஏப்ரல் 02ஆம் திகதி வெள்ளவாயாவில் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டுக் கொழும்புக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஜே.வி.பி.யின் தலைவர் ரோகண விஜேவீரவை அவருடன் பயணித்த சிலரையும் பொலிசார் கைதுசெய்தனர்.

தமது தலைவர் விஜேவீர கைதுசெய்யப்பட்ட செய்தி கிடைத்தவுடன், ஏனைய தலைமை உறுப்பினர்கள் தாம் திட்டமிட்டிருந்த நாளுக்கு முன்னதாகவே ஏப்ரல் 04ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர், அதாவது 05ஆம் திகதி அதிகாலை பொலிஸ் நிலையங்கள் மீது தமது தாக்குதலை ஆரம்பித்தனர்.

(தொடரும்)



# ஃபிரிட்ஜ்க்கு வயது 100

● வீட்டிற்கு மிகவும் பயன்படும் பொருளான பிரிட்ஜ்க்கு வயது 100. ஆமாம், இன்று நாம் பயன்படுத்தும் ஃபிரிட்ஜ் 1914 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

● முதலில் சந்தைக்கு வந்தபோது அவை ஐஸ்பெட்டி பாணியில்தான் இருந்தன.

● 1940களில் இது பணக்கார வீடுகளில் ஐஸ்கட்டி உற்பத்தி செய்ய - பாதுகாக்கப் பயன்பட்டது.

● 1950ஆம் ஆண்டு வரை ஃபிரிட்ஜின் வண்ணம் வெள்ளைதான். பிறகுதான், தங்க மஞ்சள் மற்றும் பச்சைகளில் வரலாயின. பிறகு பல் வண்ணங்களில் தேர்ந்தெடுக்க ஏதுவாய் வர ஆரம்பித்தன.


● 1990ஆம் ஆண்டிலிருந்து எவர்சில்வர் ஃபிரிட்ஜ்களும் கிடைக்கின்றன.

● முதலில் 1918இல் கெல்விநேட்டர் நுழைந்தது. அதன்பின் 1922இல் எலெக்ட்ரோலெக்ஸ் அறிமுகமானது.

● ஒரு ஃபிரிட்ஜின் உள்வெப்பம் - 18 பாகை செல்சியஸ் முதல் 23 பாகை வரை. அபூர்வமாய் சில ஃபிரிட்ஜ்கள் - 34 பாகை வரை உள்ளன.

● அபூர்வமாய் ஃபிரிட்ஜ் விபத்துக்குள்ளாவதும் உண்டு. ஃபிரிட்ஜிலிருந்து புகை கிளம்பி அதனை சுவாசித்தவர்கள் மூச்சுத்திணறி இறந்துள்ளனர்.

ஆக வீட்டை விட்டுச் செல்லும்போது, அவற்றை இயங்கும் நிலையிலேயே விட்டுச் செல்வது ஆபத்தானதுதான்.



# ஹிலாரி கிளிண்டனின் புத்தகம்!

நம் நாட்டு அரசியல்வாதிகளின் வசதி வாய்ப்புகளைப் போல் அமெரிக்காவில் இல்லைப் போலிருக்கிறது. எங்களுடைய அரசியல் சூழல் பரம ஏழையையும், பெரும் செல்வந்தராக்க வழி செய்கிறது. எளிதில் தலைமுறை தலைமுறைக்குச் சொத்து சேர்த்துவிடுகிறார்கள். ஆனால், அமெரிக்க அரசியலில் நிலைமை அப்படி அல்ல; முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன், ஜனாதிபதி பதவியை இழந்த பின், அவர் குடும்பம், பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டது. மகள் படிப்புக்காக, வீட்டையும், நிலத்தையும் அடமானம் வைத்தார். கடன் தொல்லைகளை சமாளிக்க, வேலைக்கு போனார் மனைவி ஹிலாரி. இவ்வாறு அவரின் குடும்பம் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டது என்ற விவரங்களை. புத்தகமாக வெளியிட்டுள்ளார் ஹிலாரி கிளிண்டன். Hard Choices என்ற இப்புத்தகம், தற்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.



டால்ஸ்டாய் எழுத்துகளை விரும்பி படித்த காந்தி, தன் தென்னாபிரிக்க ஆசிரமத்திற்கு. "டால்ஸ்டாய் பண்ணை" என்று பெயர் வைத்தார். நேரு ஏராளமாக படிப்பவர் அவர் தன் சுயசரிதையில், "சிறையில் பலதரப்பட்ட கடினமான நூல்களைப் படித்தேன்; நாவல்களை படிப்பதால் சோம்பல் தான் வளரும். அதனால், அவற்றை நான் படிப்பதில்லை. படிப்பதில் சோர்வு ஏற்படும் சமயத்தில், எழுத ஆரம்பித்து விடுவேன். என் மகளுக்கு (இந்திரா காந்தி) உலக வரலாறு பற்றி எழுதிய கடிதத் தொடர்; இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்தது. என் அறிவு குன்றாமல் இருக்க அந்த வேலை பெரும் துணையாக இருந்தது. கடந்த காலத்தை பற்றி எழுதும் போதெல்லாம், அதே காலத்தில் வாழ்வது போலவே உணர்ந்தேன். பண்டைக்கால யாத்ரிகர்களான யுவான்சுவாங், மார்க்கோபோலோ மற்றும் இபன் பதூதா போன்றோரின் குறிப்புகள், மத்திய ஆசிய பாலைவனங்களை சுற்றிப்பார்த்த ஸ்லென் ஹெடின், திபெத்தின் புதுமைகளை கண்ட ரோரிச் முதலிய நவீன கால யாத்ரிகர்கள் எழுதிய குறிப்புகள் போன்ற பயண நூல்கள் என்றால் எனக்கு எப்போதும் தனி ஆர்வம்..." என்று குறிப்பிட்டுள்ளார். ("பெரியோர் வாழ்வில் சுவையான தகவல்கள்" நூலிலிருந்து)

# அறிவு குன்றாமல் இருக்க...

# சினிமா சினிமா



மலையாளத்தில் பிரபல நடிகரான கலாபவன் மணிக்கு தமிழில் கமலுடன் ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என்பது நீண்டகால ஆசை. சென்னை வந்து கமலை சந்தித்து "பாபநாசம்" படத்தில் பொலிஸ் கான்ஸ்டபிளாக நடிக்க வாய்ப்பை கேட்டு வாங்கியிருக்கிறார். கமல் நாயகனாக நடிக்கும் இப்படம் மலையாளத்தில் வெளியான, த்ருஷ்யம் படத்தின் ரீ-மேக்.





8 வருடங்களுக்குப் பின் மீண்டும் திரைக்கு வருகிறார் ஜோதிகா... சூர்யாவை 2006 ஆம் ஆண்டு காதல் திருமணம் செய்து கொண்ட பின் சினிமாவை விட்டு விலகினார். இவர்களுக்கு தியா என்ற மகளும், தேவ் என்ற மகனும் உள்ளனர்.. மலையாளத்தில் மஞ்சுவாரியர் நடித்து வெளியான படம் "ஹவ் ஓல்ட் ஆர் யு." பெண்மையின் உயர்வை பேசும் இந்தப் படம் தமிழில் ரீமேக் செய்யப்படுகிறது. படத்தைத் தயாரிப்பது சூர்யாவின் 2டி பட நிறுவனம். சூர்யா கேட்டுக்கொண்டதால் ஜோதிகா நடிக்கிறார்.





"திருட்டு வி.சி.டி." என்ற படத்தின் மூலம் கதை, திரைக்கதை வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாவதுடன் முக்கிய வேடத்திலும் நடிக்கிறார் "காதல்" சுகுமார். "காமெடி, குணச்சித்திர வேடங்கள்தான் என் அடையாளம் என்றாலும், எனக்கான பயணம் ஓர் இயக்குநருக்கானது. வி.சி.குகநாதன், கமல்ஹாசன் தொடங்கி பலரிடம் உதவி யாளராகப் பணியாற்றிருக்கிறேன். வாய்ப்புகள் கிட்டும் வரை நடிகனாக பயணிக்க வேண்டி இருந்தது. இப்போதுதான் இயக்குநருக்கான இருக்கை கிடைத்துள்ளது. படத்தில் காட்சிக்குக் காட்சி காமெடி பிரதான-மாக இருக்கும்" என்கிறார் "காதல்" சுகுமார்.

"கவர்ச்சியாக நடிக்க மாட்டேன்..." என்ற கொள்கையை கடைபிடித்து வந்தவர் பாவனா. தமிழில், சித்திரம் பேசுதடி, ஜெயங்கொண்டான் மற்றும் அசல் என, பல படங்களில் நடித்தார். தான் காதலித்து வந்த மலையாள நடிகர் அனூப் மேனனை விரைவில் திருமணம் செய்து, சினிமாவை விட்டு வெளியேற திட்டமிட்டுள்ளார் பாவனா.



பதினாறு ஆண்டுக்ளுக்குப் பின், சினிமாவில் மீண்டும் பிரவேசித்துள்ள ஸ்ரீதேவி, விஜய் தமிழில் இரு வேடங்களில் நடிக்கும், புதிய படத்தில், வயதான விஜய்க்கு ஜோடியாக நடிக்கிறார். இதையடுத்து, த்ரிஷ்யம் படத்தின் தமிழ் ரீ-மேக்கிலும், ஐ.பி.எஸ். வேடத்தில் ஸ்ரீதேவியை நடிக்க வைக்கும் முயற்சி நடந்து வருகிறது. ஆக, நீண்ட இடைவெளிக்குப்பின், மீண்டும் கமலுடன் இணைகிறார் ஸ்ரீதேவி.

"சில்லுன்னு ஒரு காதல்" படத்தை தொடர்ந்து நீண்ட இடைவெளிக்குப் பின் "நெடுஞ்சாலை" படத்தை இயக்கினார் கிருஷ்ணா. வித்தியாசமான கதைக்களத்துடன் உருவாகியிருந்த இப்படம் பரவலான பாராட்டுகளைப் பெற்றது. கிருஷ்ணா தனது மூன்றாவது படத்திற்கு "மானே தேனே பேயே" என பெயரிட்டுள்ளார். தமிழ், கன்னடம், மலையாளத்தில் பிரபலமாக இருந்த நடிகை மேனகாவின் மகள் கீர்த்தி சுரேஷ் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

சமீபகாலமாக ராஜ்கிரண் தான், பல படங்களில் முன்னணி ஹீரோக்களுக்கு அப்பாவாக நடித்து வந்தார். அவருக்கு போட்டியாக சில படங்களில் நாசரும் நடித்து வந்தார். இந்நிலையில் சமீபத்தில், வேலையில்லா பட்டதாரி படத்தில் தனுஷுக்கு அப்பாவாக நடித்து, கைதட்டல் பெற்றார் இயக்குனர் சமுத்திரக்கனி. இதையடுத்து, சில அப்பா வேடங்கள் அவர் பக்கம் சென்று கொண்டிருக்கின்றன. ராஜ்கிரணுக்கு வர வேண்டிய இரண்டு படங்கள், இப்போது சமுத்திரக்கனியின் கையில்.

தன்னைப் பற்றி வெளியான திருமண செய்திகளை அடுத்து, "நான் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் தான் திருமணம் பற்றி யோசிப்பேன்..." என்று செய்தி வெளியிட்டுள்ளார் காஜல் அகர்வால்.

"ஐ" படத்தில் நடித்து முடித்து விட்ட எமி ஜாக்சன், தற்போது லண்டனில் விளம்பர படங்களில் பிசியாக நடித்து வருகிறார்.

விண்ணைத்தாண்டி வருவாயா படத்தில் த்ரிஷாவிடம் பேசும் அதே வசனங்களை மீண்டும், இது நம்ம ஆளு படத்துக்காக நயன்தாராவிடம் பேசி நடித்துள்ளார் சிம்பு.

விஜய்சேதுபதி நடிப்பில் வெளியான, பீட்சா படத்தின் ஹிந்தி ரீ-மேக், தமிழைவிட கூடுதலாக வசூலை அள்ளிக் குவித்துள்ளது.

விஷாலுடன் நடிக்கும் "பூஜை" படத்தில், கோவைத் தமிழ் பேசும் பெண்ணாக நடிக்கிறார் ஸ்ருதிஹாசன்.

கமலின், "விஸ்வரூபம் -2" எப்போது வெளியாகிறது என்ற விபரம் தெரியாத நிலையில், அப்படத்திற்குப் பின், அவர் நடித்த, உத்தம வில்லன் அக்ரோபர் 2ஆம் திகதி வெளியாகிறது.

# வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவையின் பண்பாட்டுப் பெருவிழா





வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவையின் பண்பாட்டுப் பெருவிழா இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப எழுச்சிபொங்க சிறப்பாக நடைபெற்று மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. பிரதேச செயலர் ஆர்.ரீ.ஜெயசீலன் தலைமையில் (16.08.2014) விழா நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச மலரான "செம்பருத்தி" மலர் வெளியீடு மற்றும் கலைஞர் கௌரவிப்பு, கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. பருத்தித்துறையின் மணம் கமழும் செம்பருத்தி பிரதேச மலரை கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் எஸ்.சத்தியசீலன் வெளியிட பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தலைவர் எஸ்.பத்மநாதன் பெற்றுக்கொண்டர்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ஜெயலட்சுமி இராஜநாயகம் நூல் வெளியீட்டுரையையும் சமூகவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.இராஜேஸ்கண்ணன் நூல் நயப்புரையையும் கொன்றை பி.கிருஸ்ணானந்தன் ஏற்புரையையும் நிகழ்த்தினர்.

கலைத்துறையில் சாதனைகள் நிகழ்த்திவரும் ஐந்து கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

**ஆவண ஆக்கல்துறை கலைஞர் பி.மீனாட்சிசுந்தரம்** இவருக்கு ஆவணப் படுத்தலுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. வல்வெட்டித்துறையில் 1941 ஆம் ஆண்டு பிறந்த இவர் அரும்பொருட்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்தி பிரதேசத்தின் முதன்மை வாய்ந்த ஆவணக்காப்பாளராக திகழ்கின்றார். 2500 இற்கும் மேற்பட்ட கிடைத்தற்கரிய நூல்களையும் 18, 19, 20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளின் நாணயங்கள், தபால் முத்திரைகள் மற்றும் வெண்கல பித்தளைப் பொருட்கள், கடற்கப்பற் பொருட்கள் என்பன இவரது ஆவணக்காப்பகத்தில் காணப்படுகின்றன. வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை 1937இல் சென்ற "அன்னபூரணி" பாய்க்கப்பல் பற்றிய சகல ஆவணங்களையும் பாதுகாத்து வருவதோடு "வல்வெட்டித்துறை வரலாறு" நூலையும் வெளியிட்டுள்ளார்.

**பண்டிதர் வீ.பரந்தாமன்** 1948 புலோலியில் பிறந்த இவருக்கு இலக்கியத்துறைக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரிடம் விருப்பத்திற்குரிய மாணவராகவிருந்து தமிழ் கற்று சிறுவயதிலிருந்தே இலக்கியத்துறையில் மிளிர்ந்தார்.

1970 இலிருந்து பிரபல்யமான கல்லூரிகளில் கல்வி கற்பித்து 60 ஆவது அகவையில் ஓய்வுபெற்றார். 1960 ஆம் ஆண்டு பாலபண்டிதர் பரீட்சையிலும், 1962 ஆம் ஆண்டு பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்து பண்டிதர் பரந்தாமன் ஆனார். பட்டிமன்ற வல்லுநர், வியத்தகு கட்டுரைகள், கவிதைகள், நாடக உருவாக்கங்கள் பல தந்தவர். பண்டைக்குமரியும் பழங்குடித் தமிழரும், வேரடித்தமிழ் சொற்பியும்பியல் அகராதி, திருக்குறளில் செந்தமிழராட்சி, மனிதனும் கடவுளும், அருகிவரும் பழந்தமிழ் பேச்சுவழக்குச் சொல் அகராதி போன்ற நூல்களைத் தந்துள்ளார்.

**ஊடகவியலாளர் ஏ.என்.எஸ். திருச்செல்வம்** ஊடகத்துறைக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1952 பருத்தித்துறை புலோலி கிழக்கில் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே வாசிப்பதிலும், செய்தி சேகரிப்பதிலும், எழுதுவதிலும் ஈடுபட்டவர். 1975 இல் யாழ். ஈழநாடு பத்திரிகையின் செய்தியாளரர்த பத்திரிகை உலகில் காலடி வைத்தவர். சாமஸ்ரீ தேசஜோதி, ஊடகமாணி ஆகிய பட்டங்களையும் சிறந்த பத்திரிகையாளருக்கான விருதையும் பெற்றுள்ளார்.

இவரின் சமூக, கல்வி, ஆன்மீக சேவைக்காக பல சேவை நிறுவனங்கள் விருது வழங்கிக் கௌரவித்துள்ளன. யாழ். பல்கலைக்கழகமும் உள்ளூராட்சி திணைக்களமும் இணைந்து சிறந்த நூலகருக்கான விருதையும் வழங்கியுள்ளன. இவர் ஸ்ரீலங்கா நூலக சேவை இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகருமாவார்.

**நாடகக் கலைஞர் இ.மரியதாஸ்** 1950 ஆம் ஆண்டு மாதகலில் பிறந்து பருத்தித்துறை தும்பளையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். இந்தியா சென்று மூன்று வருடப் பயிற்சியில் விவிலியம், சங்கீதம், கலை ஆகியவை-களில் சிறப்புப் பயிற்சி பெற்றார். ஒலி, ஒளி நாடகங்களில் யேசு கிறிஸ்துவாக நடித்து பாராட்டைப் பெற்றவர்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் பிரபல்யம் வாய்ந்த யேசுவின் திருப்பாடுகள் காட்சியை 6 தடவைகளுக்கு மேல் நெறிப்படுத்தி புகழ் பெற்றவர். பருத்தித்துறையில் 1971 ஆம் ஆண்டு 100 அடி நீள மேடையில் இவரின் நெறியாள்கையில் நடந்தேறிய "கன்னிபெற்ற கடவுள்" ஒலி, ஒளிக்காட்சி ஏகோபித்த பாராட்டைப் பெற்றது. பொம்மலாட்டத்தில் பயிற்சி பெற்றவர். இவர் மேடையேற்றிய நாடகங்களில் காணிக்கை, காணி நிலம் வேண்டும். நாங்கள் மாறமாட்டோம், பதவியா பாசமா போன்றன பாராட்டுக்களோடு பரிசில்களையும் பெற்றவை.


பருத்தித்துறை கத்தோலிக்க கலை இலக்கியமன்றத்தில் கலைத்துறைப் பொறுப்பாசிரியராக உள்ளார். விஜயமனோகரன், எஸ்தாக்கியர், வாழ்க்கைப் புயல் போன்ற நாடகங்களை நாட்டுக்கூத்தில் தயாரித்த பெருமைக்குரியவர்.

**நாதஸ்வர இசைக்கலைஞர் எம்.கோவிந்தராசா** தொண்டைமானாறு, கெருடாவில் தெற்கில் 1956இல் பிறந்தவர். அளவெட்டி நாதஸ்வரக் கலைஞர் எம்.பி.பால்கிருஸ்ணரிடம் 15 வயதில் நாதஸ்வர் தொழில்நுட்பங்களைப் பயின்றார். பின்பு 20 ஆவது வயதில் கோயம்புத்தூர் சுப்பையா, கணேசமூர்த்தியிடம் மேலதிக இசைத் தொழில்நுட்பங்களைப் பயின்றார். தற்போது வல்வெட்டித்துறை சிவன்கோவில், வல்வெட்டித்துறை அம்மன் கோவில், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், வேவில் விநாயகர் ஆலயங்களில் இசைத் தொண்டாற்றி வருகின்றார்.

இவரின் நாதஸ்வர இசைக்கலையைப் பாராட்டி வேவில் விநாயகராலய ஆலயத்தினராலும் உடுப்பிட்டி பெரியதம்பிரான் ஆலயத்தினராலும் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

இப்பண்பாட்டு பெருவிழா போன்ற விழாக்கள் நடாத்தப்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். இவ்விழாக்கள் எதிர்கால சந்ததியின் வாழ்வை வளம்படுத்தி அவர்கள் மகிழ்ச்சியாக வாழ வழிவகுக்கும் என்பதை சிறப்பாக நாம் கவனித்துக்கொள்ள வேண்டும்.

**யோசப்பு இருதயராஜா**
**தலைவர்,**
**பருத்தித்துறை கலைஞர் வட்டம்.**




கைதடி மேற்கு இனுவங்கித் தோட்ட அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றபோது..... (51)

# கொக்குடையான் மாலாப்பு குளம் புனரமைப்புக்கான கள ஆய்வுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் பெரியளவில் அமைகப்படவுள்ள கொக்குடையான் மாலாப்பு குளம் புனரமைப்புக்கான கலந்துரையாடல் பூநகரியில் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.



பூநகரி பிரதேச மக்களினதும், விவசாயிகளினதும் மிக நீண்ட நாள் கோரிக்கையாக கொக்குடையான் மாலாப்புக்குளம் புனரமைப்பு இருந்து வந்தது. இந்தக் கோரிக்கை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்தமயினையடுத்து அவர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு அமைவாக குறித்த குளத்தினை புனரமைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக கடந்த வருடம் நாடா ளுமன்ற உறுப்பினரால் திட்ட ஆய்வுக்காக பத்து மில்லியன் ரூபா நிதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டு தற்போது திட்டத்திற்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த கள ஆய்வுகளின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்ட போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கொக்குடையான் மாலாப்பு குளம் ஒரு பன்மைத்துவ நோக்கம் கொண்டது. அதாவது பூநகரியின் குடிநீர் தேவை, விவசாயத்தேவை, மற்றும் நிலம் உவராதலை தடுத்தல் போன்ற நோக்கங்களை கொண்டு பெரியளவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்காக பெருமளவு நிதியினை பெறவேண்டியிருக்கிறது. இந்தக் குளம் புனரமைக்கப்பட்ட பின்னர் பூநகரியில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் எனக்குறிப்பிட்டதுடன் இது ஒரு மக்கள் திட்டம் எனவும் இதில் இப்பிரதேச மக்களின் பங்களிப்புகள், கருத்துக்கள் மிக அவசியமானது எனவும் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், பூநகரி பிரதேச செயலாளர் சத்தியசீலன், கிளிநொச்சி கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தயாரூபன், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒருங்கிணைப்பாளர் ரவிராஜ், பூநகரி பிரதேச சபை உறுப்பினர் இராசலிங்கம், குகேந்திரன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் மனோகரன், பூநகரி பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர், மற்றும் பிரதேச கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சாட்டி சிந்தாத்திரை மாதாவின் வருடாந்த திருவிழா

(வேலணை)

கிறிஸ்தவ மக்களினது பிரபல சமய யாத்திரைத்தலங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழாத் திருப்பலிகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆலயத்தில் விசேடவழிபாடுகள் ஆசீர்வாதங்கள் இடம்பெற்று மறுநாள் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகையால் விசேட திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொருவ் பவனியுடன் முடிவடையவிருக்கின்றன.

மேற்படி ஆலய திருவிழா நாட்களில் கலந்து கொள்கின்ற யாத்திரியர்களின் வசதிகளைக் கருதி யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்தும் தீவகத்தின் பல பகுதிகளிலிருந்தும் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 19 ஆம் திகதி 20ஆம் திகதிகளான இருநாட்களிலும் விசேட போக்குவரத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன. (05)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் வடக்கு கோணியடி ஞானவைரவர் ஆலய மஹகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதென ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 6 மணிவரை எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறுமென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

# குப்பைகளை வீதியில் போடுவதால் நோய் தொற்றுக்கள் ஏற்படவாய்ப்பு

நெல்லியடி விக்கினேஸ்வரா கலட்டி பகுதிக்குச் செல்லும் வீதியில் குப்பைகள் கொட்டப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வடமராட்சி தெற்மேற்கு பகுதிகளில் பிரதேசசபை ஊழியர்கள் 4 நாட்கள் குப்பைகளை அகற்றிவருகின்ற போதும் இப்பகுதிகளில் குப்பைகள் அதிகமாக் காணப்படுவதாகவும் அப்பிரதேச மக்கள் குப்பைகளை கொட்டிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு குப்பைகளை வீதிகளில் போடுவதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், நோய்த் தொற்றுக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மக்கள் தமது வீடுகளில் உள்ள குப்பைகளை கட்டி வைத்து குப்பை அகற்றும் ஊழியர்களிடம் வழங்கவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (18)

# முரசின் இன்றைய பலன்



(10.09.2014 புதன்கிழமை)

ஐய வருஷம் ஆவணி மாதம் 25 ஆம் திகதி.
பிரதமை / சித்தம். துதியை பி.இ. 04.15 வரை.
உத்தர நட்சத்திரம் பி.இரவு. 02.28 வரை. பின் ரேவதி.
இராகு காலம 12.03 - 01.33 வரை. சுபநேரம 04.33 - 06.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பாகப்பிரிவினையால் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே முரண்பாடு ஏற்படல், வாக்குறுதி அளிப்பதை இயன்ற வரை கைவிட்டு விடுவது நன்மைதரும். |
| ரிஷபம் | புதிய நபர் அறிமுகமாகிய போது நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் உறவினைத் துண்டித்தல், பொருள் விற்பனைக்கு புதிய யுத்திகளைக் கையாள்தல். |
| மிதுனம் | உறவுகள் பிரிவதால் மனவேதனை ஏற்படல், உதவி நாடி வந்தவர் மீது பரிதாபப்பட்டு தேவையை நிறைவேற்றி வைத்தல். |
| கடகம் | சகோதரர் ஒற்றுமையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரித்தல். |
| சிம்மம் | ஞாபக மறதியினால் கைபேசி மற்றும் பொருட்களைத் தொலைத்து விடல், பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக உழைத்தல். |
| கன்னி | ஆலய பரிபாலன சபையில் ஏகோபித்த முடிவில் தலைமைப் பதவியைப்பெறுதல், வேலை கிடைப்பதில் சிக்கல் ஏற்படல். |
| துலாம் | நீண்ட நாட்களாக எதிர்பார்த்த உதவி கிட்டலாம், கடல் மூலம் அயல் நாடு செல்ல முயற்சித்து தடை ஏற்படல். |
| விருச்சிகம் | ஆடம்பரச் செலவினங்களைக் கைவிட்டு சேமிப்பு மனப்பாங்கில் மனம் பதித்தல், குடும்பத்தின் உயர்வை எண்ணி கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்த முற்படல். |
| தனுசு | மன அமைதியைப் பாதிக்கும்படியான சம்பவங்கள் ஏற்பட்டவேளை பொறுமையைக் கடைப்பிடித்தல், இழுபறியாக இருந்த காரியங்களில் எதிர்பாராத திருப்பம் ஏற்படல். |
| மகரம் | திருமணம் தொடர்பாக வற்புறுத்தல், தொலைந்த ஆவணத்தைப் பகீரதப் பிரயத்தனமெடுத்து தேடியதால் கிட்டி விடல். |
| கும்பம் | மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகாமல் இருந்ததினால் துயர் விலகிப்போதல், செய்யாத செயலுக்கு சூழ்நிலையின் சதியினால் குறைகேட்டு கவலை தக்கவைத்தல். |
| மீனம் | நட்புவட்டாரம் விரிவடைந்ததினால் காரிய சித்தி சுலபமாக ஏற்படல், மேலதிகாரிகளின் ஆதரவு சாதகமாக இருந்ததினால் பதவி உயர்வுக்கு சிபார்சு செய்யப்படல். |

# பேருந்துக்கு காத்துநிற்கும் மாணவர்கள்

# மானிப்பாயில் போக்குவரத்து நெரிசல்

## - விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள் -

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு முன்னுள்ள பேருந்து தரிப்பிடத்தில் பாடசாலை முடிவுற்ற பின் அதிகளவான மாணவர்கள் பேருந்துக்கு காத்திருப்பதால் அங்கு விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் பிரதேசத்தில் 5 அரச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலையும் உள்ளதால் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பலர் பேருந்தில் பயணம் செய்வதால் பேருந்து தரிப்பிடத்தில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இவ்வாறு அதிகளவான மாணவர்கள் அங்கு நிற்பதால் வீதிகளில் பயணம் செய்யும் வாகனங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி அப்பகுதிகளில் நிற்கும் மாணவர்களால் வீதி விபத்துக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து பயணிகளின் சிரமத்தை போக்க வேண்டுமெனவும் விபத்துக்கள ஏற்படுவதை தடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

## விசேட அபிஷேகம்

(கோண்டாவில்)

கோண்டாவில் செம்மாந்தோட்டை அருள்மிகு ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 15தினங்கள் உற்சவம் நடைபெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை காலை 9.30மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெறவுள்ளது. என்பதனை ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளார்.

## லொறியின் சக்கரம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மாம்பழம் சந்திப்பகுதியில் லொறியின் சக்கரம் ஒன்று கடந்த 31ஆம் திகதி திருட்டுப் போயுள்ளதாக அதன் உரிமையாளரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளன.

பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புகையிரத வீதிகளை நிர்மாணிக்கும் பொறியியளாராக பணியாற்றி வரும் ஏகாம்பரம் என்பவரது லொறியின் சக்கரமே திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் வசித்துவரும் இவர் தற்போது மாம்பழம் சந்தியிலுள்ள வேலைத்தளத்தில் தற்காலிகமாக வசித்து வருவதாகவும் இவர் தனது வேலைகளுக்காக பயன்படுத்தி வந்த லொறியின் சக்கரமே திருட்டுப் போயுள்ளதாகவும் அதன் பெறுமதி 24500ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சோசலிச கட்சியின் பகிரங்கக்கூட்டம்




(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் ஆசியா நோக்கிய "திருப்பமும் உலகப்போர் அச்சுறுத்தலும்'' எனும் தொனிப்பொருளிலான பகிரங்கக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சோசலிச சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலாளித்துவ முறைமையின் அடிப்படையில், இருந்தே புதிய உலகப் போருக்கான ஆபத்து எழுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது..

அதுமட்டுமன்றி இந்தக்கூட்டத்தில் முரண்பாடு, பொருளாதாரம், அபிவிருத்தி, உற்பத்தி சாதனங்களில் தனியார் உரிமைத்துவம் மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பானவும் விவாதிக்கப்பட்டது.

அக்கூட்டத்தில், சோசலிச சமத்துவக் கட்சியின் இளைஞர் மற்றும் மாணவர் அமைப்பு தலைவர் கபில பெர்னான்டோ மற்றும் அரசியல் குழு தலைவர் எம்.அரவிந்தன், யாழ்.மாவட்ட அமைப்பாளர் பி.சம்பந்தன் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (25)

# ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாவிட்டபுரத்தில் சிரமதானப் பணி



(தெல்லிப்பளை)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய சுற்றாடலில் உள்ள மக்களில் ஒரு தொகுதியினர் வடமாகாண சபையின் ஆளுநர் அலுவலக ஊழியர்கள், மற்றும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர்கள் ஆகியோர் இணைந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் சிரமதானப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆலயத்தில் இடம்பெறும் திருப்பணிகள் காரணமாக ஆலய சுற்றாடல் துப்பரவு அற்ற நிலையில் காணப்படுவதையிட்டு வடமாகாண ஆளுநர் வழிபாட்டுக்கு வந்தபோது ஆலய சுற்றாடலை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஆலய திருப்பணி நடைபெறுவதனை கருத்தில் கொண்டு மாதத்தில் இரண்டு தடவைகள் ஆலயத்திற்கு வழிபாட்டுக்கு வரும் அடியவர்களின் நன்மை கருதி இந்நடவடிக்கையை வடமாகாண ஆளுநர் அலுவலகம் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63)

# ஆயுர் வேதம்



## வாயுவின் சீற்றமும் எலும்புகளில் வலியும்!

வயோதிகத்தில் வாயுவின் சீற்றமானது உடலில் இயற்கையாகவே கூடுகிறது. அதனுடைய சஞ்சார விசேஷமானது எந்தவிதத் தடங்கலுமில்லாமல் அமைவதும், அதற்குரிய உடல் பகுதிகளில் அடங்கி இருத்தலும் தன்னுடைய செயல்களில் தொய்வு ஏதும் ஏற்படாமல் சரிவர செய்து கொண்டிருத்தலும் நீண்ட ஆயுளுக்குக் காரணமாகிறது.

பிராணன் – உதானன் – ஸமானன் – வ்யானன் மற்றும் அபானன் என்ற வகையில் ஐந்து வகையாக வாயுவானது நம் உடலின் உள்ளே பிரிந்து தனித்தனியாக செயல்களைச் செய்து ஆரோக்கியத்திற்கு குந்தகம் ஏதும் ஏற்படாமல் பாதுகாத்து வருகின்றன.

வாயுவின் பொதுகுணங்களாகிய வறட்சி, லேசான தன்மை, குளிர்ச்சி, நுட்பமான தன்மை, நகரும் தன்மை போன்றவை வயோதிகத்தில் கூடுவதால் அவற்றின் தாக்கம் எலும்புகளில் உணரப்படுவதால், முதுகுத் தண்டு வட எலும்புகளைத் தாங்கிப் பிடிக்கும் வில்லைகளில் வறட்சியை ஏற்படுத்தி அவற்றின் உயரம் குறைந்து மெலிந்து போய் வெளிப்புறமாக பிதுக்கிவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது.

இதனால் ஏற்படும் அழுத்தமானது நரம்புகளினூடே செல்லும்போது நீங்கள் நடக்கும்பொழுதும், சாய்ந்து படுத்துத் தூங்கும் போதும் வலி அதிகமாகத் தென்படக்கூடும். இந்த வில்லைகளை வலுப்படுத்த வேண்டும்.

எலும்புகளைத் தாக்கியிருக்கக் கூடிய வாயுவின் வறட்சி போன்ற குணங்களை மாற்றியமைக்கக் கூடிய உணவு, நடவடிக்கை மற்றும் மருந்துகள் ஆகியவற்றை கடைப்பிடிக்கவேண்டும். வாயுவின் சீற்றம் மேலும் ஏற்படாதவாறு தகுந்த பாதுகாப்பான வழிகளைப் பின்பற்ற வேண்டும்.

இவையனைத்தும் சீராவதற்குப் பசித் தீயானது நல்லமுறையில் செயலாற்ற வேண்டும். அதற்கான சில வழிமுறைகள்:

**உணவு:** இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவைகளையும், மாமிச வகை உணவுகள் பொதுவாகவே உடலுக்கு ஊட்டம் தருபவையாகையால் அவற்றை மிதமாகச் சேர்க்கலாம். நெய்ப்பு தரும் நெய், எண்ணெய், எள்ளு, தேங்காய்ப் பால் போன்றவற்றை உணவில் சிறிது சேர்த்துக் கொள்வது வாயுவின் வறட்சியைக் குடலில் தவிர்த்திடச் செய்யும்.

உணவு வகைகளில் காரம், கசப்பு மற்றும் துவர்ப்புச் சுவை கொண்டவற்றையும், குடலில் வாயுவின் சீற்றத்தை ஏற்படுத்தும் துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, கொண்டைக் கடலை, வேர்க்கடலை, மொச்சைக் கொட்டை, பலாக்கொட்டை, காராமணி, கொத்தவரங்காய், அவரைக்காய், பீன்ஸ், உருளைக் கிழங்கு, வாழைக்காய் போன்றவற்றையும் தவிர்ப்பது நலம்.

**செயல்கள்:** வெதுவெதுப்பான வெந்நீரில் குளிப்பது நல்லது. அதுவும், வெறுமனே உடலில் வெந்நீரை ஊற்றுவது வறட்சியை ஏற்படுத்தும் என்பதால் உடலெங்கும் வெதுவெதுப்பான நல்லெண்ணெயை நீவித் தேய்த்து சிறிது நேரம் ஊறிய பிறகு குளிப்பதே நலம் பயக்கும். எண்ணெய்ப் பசையை அகற்றுவதற்கு சோப்பிற்கு பதிலாக பச்சைப்பயறுத் தூளை வெந்நீரில் கரைத்து உபயோகிப்பது தோலில் வறட்சியை ஏற்படுத்தாது.

இரவில் பல மணி நேரம் குளிரூட்டப்பட்ட அறையில் படுத்துறங்குவது நல்லதல்ல. குளிர்ச்சி எனும் வாயுவின் ஒரு குணமானது இதன் மூலம் எலும்புகளைத் தாக்கக்கூடும்.

ஒரே இருக்கையில் பல மணிநேரம் அமர்ந்திருத்தல், கால் மேல் காலிட்டு அமர்தல், நேரே அமராமல் முதுகுத் தண்டுவடம் வளையும் வகையில் அமர்தல் ஆகியற்றைத் தவிர்த்திடல் வேண்டும்.

**சிகிச்சை:** Disc விலகியுள்ள பகுதிகளின் மேலே வெளிப்புறத் தில் உளுந்து மாவினை வரம்பாகக் கட்டி அதனுள்ளே பஞ்சுவைத்து ராஸனாதிசூரணம் எனும் மருந்தைத் தூவி, அதன்மேல் ஒருசில மூலிகைத் தைலங்களை வெதுவெதுப்பாக ஊற்றி சுமார் அரை, முக்கால் மணிநேரம் வைத்திருந்து அதன் பிறகு தைலத்தை அகற்றி வரம்புகளையும் எடுத்துவிடும் சிகிச்சைமுறை, வில்லைகளை வலுப்படுத்தி எலும்புகளுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தரும்.

முதுகுத் தண்டுவட எலும்புகளை எளிதாக வளைந்து நிமிர்த்தும் வண்ணம் இந்தச் சிகிச்சைமுறை உதவுகிறது.

மூலிகை வேர்களைத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அதிலிருந்து வெளிப்படும் நீராவியை Disc விலகியுள்ளப் பகுதிகளில் எண்ணெய்யை நீக்கியபிறகு காண்பிப்பதும் வில்லைகளை மிருதுவாக்கி தான் இருந்த அதே இடத்திற்கு திருப்பக்கூடிய ஒரு சிறந்த சிகிச்சை முறையாகும்.

ஆயுர்வேத மருந்துகளாகிய மஹாராஸ்னாதி கஷாயம், க்ஷீரபலா 101, பாலுடன் சேர்த்துச் சாப்பிடப்படும் யோகராஜகுக்குலு, முஸ்தாதி மர்ம கஷாயம், கந்த தைலம் போன்ற மருந்துகள் Disc நழுவும் குறைபாடுகளை நீக்க தரமானவை. மருத்துவரின் ஆலோசனையின் பேரில் இவற்றை சாப்பிட்டுப் பயனடையலாம்.

# "எந்நிதியும் தருவான் சந்நிதியான்" பாடல் இறுவட்டு வெளியீடு



(யாழ்ப்பாணம்)

டிடி தொலைக்காட்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட "எந்நிதியும் தருவான் சந்நிதியான்" பாடல் இறுவட்டினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டு வைத்தார்.

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வளாகத்தில் இப்பாடல் இறுவட்டு நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முன்பதாக மங்கள விளக் கேற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.


செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த தேர் உற் சவத்தையொட்டி டிடி தொலைக்காட்சி நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்ட எந்நிதியும் தருவான் சந்நிதியான் என்ற பாடல் இறுவட்டினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை ஆலய பிரதம குரு சசீந்திரன் ஐயர் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து ஏனைய பிரதிகளை யாழ்.மாநகர சபை யின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் கைலாஜினி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இறுவட்டிலுள்ள வெற்றி துசியந்தன் இயற்றியுள்ள இப் பாடலை சுதர்சனின் இசையில் பஞ்சமூர்த்தி குமரன் பாடியுள்ளார்.

இப்பாடல் செல்வச் சந்நிதி முருகனின் புகழ்பாடும் பாடலாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உணர்ச்சிப் பேச்சுக்களால் உரிமைகளை வென்றெடுக்க முடியாது



உணர்ச்சிப் பேச்சுக்களாலும் நடைமுறை சாத்தியமற்றதுமான வழிமுறைகளில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதுடன் எமது மக்களின் அரசியல் உள்ளிட்ட உரிமைகளையும் ஒருபோதும் வென்றெடுக்க முடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிகள் தமது நியமனம் தொடர்பில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோரிக்கைகள் நியாயத்தினதும் தேவைகளினதும் அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும். அதுவும் நடைமுறைசாத்தியமான வழிமுறைகளினூடாகவும் அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து வீராவேசப் பேச்சுக்களாலும் உணர்ச்சிப் பேச்சுக்களாலும் எமது மக்களுக்கான அரசியல் உள்ளிட்ட உரிமைகளை ஒருபோதும் வென்றெடுக்க முடியாது என்பதுடன் தேசியப் பிரச்சினைக்கு நடைமுறை யதார்த்த வழிமுறைகளின் மூலமே தீர்வுகாண முடியுமென்பதே எமது நிலைப்பாடாகும் என்றார்.

இதன்போது பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரி பட்டதாரிகளாக தமது பட்டப் படிப்புக்களை 2012 ஆம் ஆண்டு பூர்த்தி செய்திருக்க் வேண்டிய மாணவர்கள் விரிவுரையாளர்களின் வேலைநிறுத்தம் மற்றும் மாணவர்களின் விரிவுரை பகிஷ்கரிப்பு காரணமாக 2013 ஆம் ஆண்டுதான் பட்டப்படிப்புக்களை பூர்த்தி செய்திருந்தனர்.

இந்நிலையில் அதேயாண்டு நாடுபூராகவும் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் நியமனங்களின் போது உள்வாங்கப்படவில்லை. இந்நிலையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது. குறிப்பிட்ட நிலமையை கருத்தில் கொண்டு தமது நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்குமாறு பட்டதாரிகள் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்த போது பட்டதாரிகளின் கருத்துக் களையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் ஆகியோர் உடனிருந்தனர்.

# மின்சாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் திருட்டு முயற்சியை முறியடித்த "பூட்டு"

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியும் கஸ்தூரியார் வீதியும் இணையும் சந்தியில் உள்ள மின்சாதனப் பொருடகள் விற்பனை நிலையம் ஒன்று நேற்று முன்தினம் இரவு திருடர்களினால் பூட்டு உடைக்கப்பட்டு திருட்டு முயற்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப் பாட்டை அடுத்து பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு குறித்த கடை பூட்டப்பட்டதன் பின்னர் நேற்று அதிகாலை 6 மணிக்கு கடையின் உரிமையாளர் கடையைத் திறந்து பார்த்தபோது கடையின் முன்பக்க பூட்டுக்கள் உடைக்கப்படிருந்த நிலையில் நடுவேயுள்ள பூட்டு மட்டும் உடைக்கப்படாத நிலையில் கடை காணப்பட்டதனையடுத்து யாழ். பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து வந்து பார்வையிட்டதனையடுத்து கடை திறக்கப்பட்டதாவும் தெரிவிக்கப் படுகிறது.

எனவே நடுப்பூட்டு உடைபடாததனை அடுத்து திருடர்கள் திருட்டு முயற்சியை கைவிட்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சனநடமாட்டம் உள்ள பகுதியில் அருகேயுள்ள கடை சிலவற்றிற்கு பாதுகாப்பு ஊழியர் இருந்தும் இவ்வாறான திருட்டு முயற்சி ஒன்று நடைபெற்றுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மூவருக்கு டெங்கு

கடந்த இரு நாட்களில் மூன்று பேர் டெங்குத் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவரும் நேற்று முன்தினம் கோப்பாய் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து தலா ஒவ்வொருவருமாக இந்த சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்த அந்த அதிகாரி இந்த மாதம் நேற்று வரை இவ்வாறு 18 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கபபட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார. (பா)

# முதியவர்களுக்கு மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் 55 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்களுக்கு இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், மூக்குக்கண்ணாடிகளும் வழங்கும் நடவடிக்கை வலி. தென் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது

அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த இலவச மருத்துவ முகாமில், வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 150 முதியவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், கண் சத்திரசிகிச்சை செய்யவேண்டிய தேவை ஏற்படுபவர்களுக்கு வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இதேவேளை, கண் வில்லைகளும் இலவசமாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த இலவச மருத்துவ முகாமில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்பாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகருடன் தொடர்பு கொள்ளுமாறு. கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# முருங்கைக்காயின் விலை சந்தைகளில் திடீர் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சந்தைகளில முருங்கைக் காயின் விலை திடீரென வீழ்ச்சி கண்டுள்ளது. சந்தைகளில் இவ்வாறு திடீர் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர்.

நெல்லியடி சந்தையில் முருங்கைக்காயின் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. 1 கிலோ கிராம் முருங்கைக் காயின் விலை 20 ரூபா ஆக சந்தைகளில் விற்பனை செய்யப் படுகிறது. இதனால் இப்பிரதேசத்தை சேர்ந்த முருங்கைக்காய் வியாபாரிகள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர். இதனால் வியாபாரிகள் பெரும் நஷ்டத்தை எதிர் கொள்கின்றனர்.

சாவகச்சேரியில் ஒரு கிலோ கிராம் முருங்கைக்காய் 60 ரூபாவும், திருநெல்வேலியில் ஒரு கிலோகிராம் முருங்கைக் காய் 50 ரூபாவிற்கும் விற்கப்படுகிறது. இதனால் வியாபாரிகள் நஷ்டத்தை அடைந்தாலும் பொது மக்கள் விலை குறைவால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (85)





பாழ்ப்பாண கோட்டைக்கு அருகிலும் பண்ணைக் கடற்கரையோரமாகவும் ஓய்வு நேரத்தை மகிழ்ச்சிகரமாக போக்குவதற்கு அழகிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப் பூங்காவிற்கு மக்கள் மாலைப் பொழுதை களிப்பதற்கு வருவதைக் காணமுடிகிறது. (85,நி)

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்**

**பகுதி A** **பகுதி I**

1) சீனி 1 Kg இன் விலை ரூ.110 ஆகும். 1500g சீனியின் விலை யாது?

2) 2.5 லீற்றரை மில்லி லீற்றரில் தருக.

3) $\frac{x}{2} = 5$, x இன் பெறுமானம் காண்க.

4) சுருக்குக $(-8) + 3$

5) சுருக்குக $0.25 \times 100$

6) 10 இலும் குறைந்த முதன்மை எண்களின் தொடையை எழுதுக.

7) $x > 1$ எனும் சமனிலியை எண்கோட்டில் குறிக்க.

8) எளிய வடிவில் தருக. 10 : 15

9) x, $75^0$ $82^0$ என்பது முக்கோணியொன்றின் கோணங்களாகும். x இன் பெறுமானம் காண்க.


10) செவ்வகத்தின் பரப்பளவு $35\ cm^2$ ஆகும். அதன் நீளம் 7 cm எனின் அகலம் யாது?

11) காரணிப்படுத்துக. $x^2 - 100$

12) $\log_3 81$ பெறுமானம் காண்க.

13) நாணயமொன்று இருமுறை மேலே எறியப்படுகிறது. மாதிரிவெளியை மரவரிப்படத்தில் காட்டுக.

14) உருவில் (a+b) இன் பெறுமானம் காண்க.




15) சுருக்குக $\frac{1}{x-1} - \frac{1}{x-1}$

16) $\sin x = \cos 60^0$ எனின், x இன் பெறுமானம் காண்க.

17) A : B = 2 : 3, B : C = 4 : 5 எனின், A : B : C காண்க.

18) சுருக்குக. $\frac{2}{3} + \frac{5}{6}$ இன் $\frac{2}{5}$

19) சிலிண்டர் வடிவ நீர்த் தாங்கியின் அடியின் பரப்பளவு $3.85m^2$ ஆகும். அதன் உயரம் 1.5 m ஆகும். அதன் கொள்ளளவைக் காண்க.


20) பயணமொன்றின் $\frac{3}{4}$ பங்கு தூரம் 36 km ஆகும். அப்பயணத்தின் முழுத் தூரம் எவ்வளவு?

21) t ஐ எழுவாயாக்குக. $v = u + at$


22) $T_n = 2n+1$ இனால் கூட்டல் விருத்தியொன்றின் உறுப்பு காட்டப்பட்டுள்ளது. பொது விகிதத்தினைக் காண்க.

23) ரூபா 300 இற்கு வாங்கப்பட்ட பொருள் 360 இற்கு விற்கப்பட்டது எனின், இலாப சதவீதத்தினைக் காண்க.

24) உருவில் காட்டப்பட்டிருப்பது ஆரைச்சிறை யாகும். வில் AB நீளத்தைக் காண்க. O மையமாகும். $(\pi = \frac{22}{7})$




25) ABCD வட்ட நாற்பக்கங்களாகும். x இன் பெறுமானம் காண்க.




26) அடைப்பு நீக்கி சுருக்குக. $2(a+1) - 3(a-1)$

27) நேர்கோடு ஒன்றின் படித்திறன் -2 ஆகும். அந்நேர்கோடு (0,1) இல் y அச்சை வெட்டுகிறது. இந்நேர்கோட்டின் சமன்பாட்டினை எழுதுக.

28) சுருக்குக. $(27)^{\frac{-1}{3}}$

29) A, B என்பன இரு நிலைத்த புள்ளிகளாகும். புள்ளி C அசைவது $A\hat{C}B = 90^0$ ஆகுமாறு C இன் ஒழுக்கை விபரிக்குக.

30) தசம எண்ணாக மாற்றுக. $1001_{இரண்டு}$

**பகுதி B**

01) சீமெந்துக் கலவை ஒன்றில் சீமெந்து, மணல், சுண்ணாம்பிற்கிடையிலான விகிதம் 1 : 4 : 3 ஆகும்.

a) i) கலவையிலுள்ள சீமெந்தின் பின்னத்தைக் காண்க.

ii) 20 மணல் தாச்சிகள் கலவைக்கு இடும்போது எத்தனை சீமெந்து தாச்சிகள் இடவேண்டும்.

b) 48 தாச்சி சீமெந்துக் கலவையிலுள்ள சீமெந்து, மணல், சுண்ணாம்பு தாச்சிகளின் அளவை தனித்தனியாகக் காண்க.

c) நிகழ்காலத்தில் சுண்ணாம்பின் பாவனை குறைக்க வேண்டியுள்ளது. இதற்குக் காரணங்கள் 2 தருக.

02)

> பிரதேச சபையினால் தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள வீடுகளின் ஆண்டு வரி அறவிடுவது அவ்வீட்டின் ஆண்டுப் பெறுமதியில் 15% ஆகும். ஆண்டு வரியை காலாண்டிலும் செலுத்தலாம்.

i) காலாண்டு என்பது எத்தனை மாதங்களாகும்?

ii) ரூ. 40000 ஆண்டுப் பெறுமதி உடைய வீட்டிற்காகச் செலுத்த வேண்டிய காலாண்டு வரியைக் காண்க.


iii) ஒருவர் காலாண்டு வரியாக ரூ. 675 செலுத்துகிறார் எனின், அவ்வீட்டின் ஆண்டுப் பெறுமதி எவ்வளவு?

iv) $\sqrt{20} + \sqrt{5}$ கூட்டுக.

03) டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது. ( ஒருவரால் ஒரு வகையான புத்தகம் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டது)

| | | |
|---|---|---|
| - புனைகதைகள் | = | 158 |
| - கவிதைகள் | = | 138 |
| - இரு வகைகளிலும் ஒரு வகையாவது கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கை | = | 108 |
| - n(Σ) | = | 332 |

a) மேற்படி தரவுகளின் அடிப்படையில் வெண் உருவை பூரணப்படுத்துக.




b)

i) புனைகதைகள் மட்டும் கொள்வனவு செய்தோர்களின் எண்ணிக்கை யாது?

ii) புனைகதைகள், கவிதைப் புத்தகங்கள் கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கை யாது?

iii) புனைகதைகள் அல்லது கவிதைப் புத்தகங்கள் கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கை யாது?

04) குறித்த ஒரு பிரதேசத்திற்கு கிடைத்த மழைவீழ்ச்சி mm இல் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. (இங்கு 15 - 25 என்பது 15 mm அல்லது அதிலும் அதிகம் 25 mm இலும் குறைவு)

| மழைவீழ்ச்சி | 15 -25 | 25 - 35 | 35 - 45 | 45 - 55 | 55 - 65 |
|---|---|---|---|---|---|
| நாட்களின் எ.கை (மீடிறன்) | 2 | 3 | 5 | 6 | 4 |

a) இக்கால எல்லையினுள் பதிவாகியிருக்கும் உயர் மழைவீழ்ச்சி எவ்வளவு?

b) மீடிறன் பரம்பலின் ஆகாரம் எவ்வளவு?

c) எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நாளொன்றில் பதிவாகிய மழைவீழ்ச்சி 35 mm இலும் அதிகமாயிருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

d) வலையுரு வரையத்தினை வரையாது மீடிறன் பல்கோணியை வரைக.

05) வட்ட வடிவ மைதானத்தினைச் சுற்றி மணித்தியாலயத்திற்கு 33 கிலோ மீற்றர் எனும் மாறா வேகத்தில் ஈருருளியைச் செலுத்தும் ஒருவர் 6 சுற்றுக்களைச் சுற்றுவதற்கு 3.6 நிமிடங்கள் எடுக்கிறார். $\left(\pi = \frac{22}{7}\right)$

a) ஒரு நிமிடத்தில் பயணம் செய்யும் தூரம் எவ்வளவு?

b) ஒரு சுற்றை முழுமையாக முடிக்க எடுக்கும் நேரம் எவ்வளவு?

c) மைதானத்தின் பரிதியைக் காண்க.

d) மைதானத்தின் விட்டத்தைக் காண்க.

e) மைதானத்தின் பரப்பளவைக் காண்க.

## பகுதி II

### பகுதி A

01)

மின் உபகரணமொன்றை இறக்குமதி செய்யும்போது அதன் பெறுமதியின் 40% ஐ சுங்கவரியாகச் செலுத்த வேண்டும்.

a) ரூ. 250 000 பெறுமதியுடைய இயந்திரத்திற்காகச் செலுத்த வேண்டிய சுங்க வரியைக் காண்க.

b) சுங்கத் தீர்வைக்கு மேலதிகமாக போக்குவரத்துச் செலவு - வேறு செலவுகளாக ரூ. 12000 செலவு செய்யப்பட்டது.

i) இயந்திரத்திற்காக செலவு செய்த முழுத்தொகை எவ்வளவு?

ii) இயந்திரத்தை விற்பதால் 15% இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.

c) இவ் இயந்திரத்தை நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது 10% வட் வரி அறவிடப்படுகிறது. செலுத்த வேண்டிய வட் வரி எவ்வளவு?

02) மாறி x இன் ஒத்த பெறுமானங்கள் சிலவற்றை ஒத்த சார்பு $y = 2x^2 + 5$ இன் பெறுமானங்கள் இடம்பெறும். அட்டவணை கீழே காணப்படுகின்றது.

| x | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -13 | - 3 | | 5 | 3 | -3 | - 13 |

a) i) $x = -1$ ஆக இருக்கும்போது y யின் பெறுமானத்தைக் காண்க.

ii) வரைபு தாளில் பொருத்தமான அளவிடையை எடுத்து சார்பின் வரைபை வரைக.

b) உமது வரைபைக் கொண்டு

i) சார்பு நேராகும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.

ii) உச்சியின் ஆள்கூறுகளை எழுதுக.

iii) $y = -2(x+1)^2 + 5$ சார்பின் உச்சியின் ஆள்கூறுகளை உய்த்தறிக.

03) $A = \begin{pmatrix} 2 & 3 \\ 4 & 5 \end{pmatrix}$ $B = \begin{pmatrix} 4 & 2 \\ 3 & 5 \end{pmatrix}$ $C = \begin{pmatrix} x+y & 5 \\ 7 & y+x \end{pmatrix}$

i) $2A + 3B$ தாயத்தை எழுதுக.

ii) $A + B = C$ எனின், x, y உள்ளடங்கிய ஒரு சோடி சமன்பாடுகளை எழுதுக.

iii) மேற்படி சமன்பாட்டைத் தீர்ப்பதால் x, y இன் பெறுமானங்களைக் காண்க.

04) குறிப்பிட்ட சில மனிதர்களின் திணிவு கீழே காட்டப்பட்டுள்ளது.

| திணிவு (kg) | 40-46 | 47-53 | 54-60 | 61 - 67 | 68 -74 | 75-81 | 82-88 |
|---|---|---|---|---|---|---|---|
| மனி. எண்ணிக்கை (மீடிறன்) | 06 | 17 | 18 | 14 | 6 | 12 | 07 |

a) ஆகார வகுப்பாயிடையை எழுதுக.

b) ஒரு மனிதரின் இடை திணிவைக் கணிக்க.

c) இவர்களுள் ஒருவர் எழுமாறாக தெரிவு செய்தால் அவர் 60 kg இலும் அதிகமாவதற்கான நிகழ்தகவினை தருக.

05) a) தீர்க்க. $\frac{3x - 4}{x} - 1 = 0$

b) பொருத்தமான முறையை உபயோகித்து $x^2 - 4x + 2 = 0$ சமன்பாட்டின் தீர்வுகளை முதலாம் தசமத்திற்கு திருத்தமாக தருக.

06) a) மலை அடிவாரத்திலிருந்து 240 m தூரத்தில் மலை உச்சி $27^0$ ஏற்றக் கோணத்தில் தென்படுகிறது.

i) மலையின் உயரத்தைக் காண்க. (கிட்டிய மீற்றரில்)


ii) இன்னும் 60m மலை அடியை அண்மித்த உடன் மலை உச்சி தென்படும் ஏற்றக் கோணத்தைக் காண்க.

b) A எனும் புள்ளியிலிருந்து B, C புள்ளிகளின் தூரமும் திசைகோளும் கீழே காட்டப்பட்டுள்ளன. அத்தரவுகளினூடாக BC இன் தூரத்தைக் காண்க.

| | தூரம் | திசைக்கோள் |
|---|---|---|
| புள்ளி B | 5 m | $050^0$ |
| புள்ளி C | 12 m | $140^0$ |

### பகுதி B

07) a) அலங்காரம் ஒன்றிற்காக செவ்வக வடிவ காட்போட் துண்டுகள் வெட்டப்படுவது குறிப்பிட்டதொரு கோலத்திலாகும். வெட்டப்படும் முதல் மூன்று செவ்வகங்களும் கீழே காட்டப்பட்டுள்ளது. அதில் அளவுகள் சென்ரிமீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.




i) முதல் மூன்று செவ்வகங்களினதும் பரப்பளவுகளைக் காண்க.

ii) 10 ஆவது செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

iii) 10 செவ்வகங்களை வெட்டுவதற்காக 40 cm நீளமும் 15 cm அகலமும் உடைய காட்போட் போதுமென நிமல் கூறினான். அது உண்மையா பொய்யா என காரணத்துடன் குறிப்பிடுக.

b) 2, 6, 18, 54 !! !! ............... பெருக்கல் விருத்தியின் முதல் 10 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகையைக் காண்க.

08) cm / mm நேர்விளிம்பையும் கவராயத்தினையும் மாத்திரம் பயன்படுத்தி அமைப்பு கோடுகளை தெளிவாக காட்டி

i) AB = 7.5 cm, AD = 6 cm, $B\hat{A}D = 60^0$ உடைய முக்கோணி ABD ஐ அமைக்க.

ii) B, D புள்ளிகளுக்கு சமதூரத்தில் அமையும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.

iii) AB மீது மையம் அமையுமாறும் B, D யினூடாக செல்லும் வட்டத்தை அமைக்க. அதன் ஆரையை அளந்து எழுதுக.

09) தரம் 11 இல் கணித பாடத்திற்கான தலைவர் மற்றும் உப தலைவரைத் தெரிவுசெய்வதற்காக தகைமை உடைய இரு மாணவர்களும் மாணவிகள் மூவரும் தெரிவு செய்யப்பட்டனர். இதில் இருவர் இந்தப் பதவிக்காக நியமிக்கப்படுவர்.


a) மேற்படி நிகழ்விற்குப் பொருத்தமான எல்லா நிகழ்வுகளையும் உள்ளடக்கிய மாதிரி வெளியை தெக்காட்டி தளத்தில் காட்டுக.


b) நீங்கள் மேலே வரைந்த வரைபைப் பயன்படுத்தி இரு பதவிகளுக்கும்,

i) பெண் பிள்ளைகள் தெரிவாதல்

ii) ஆண் பிள்ளைகள் தெரிவாதல்

iii) ஒரு பிள்ளையாவது பெண் பிள்ளையாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.





மண்டைதீவு திருவெண்காடு அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் அண்மையில் நடைபெற்றது. இதில் விநாயகப்பெருமான் எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோகணிப்பதையும் காணலாம். (51)

# காணொளி வெளியீடும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும்



(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் நிமாலின் வலியின் வரிகள் காணொளி இசைதட்டு வெளியீடும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கலும் இலங்கை இந்து பேரவையின் ஆதரவுடன் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு செல்வபுரம் யூதாகோவில் முன்பள்ளி மண்டபத்தில் நேற்று இந் நிகழ்வு வைத்திய கலாநிதியும் வடமாகாண சபை உறுப்பினருமான சி.சிவமோகன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முல்லை மண்ணில் பிரதிபலிக்கும் நிமாலின் உருவாக்கத்தில் அவரின் இசையமைப்பில் உருவான தன்னுடைய வலிமையை சித்தரிக்கும் முகமாக இரண்டு காலையும் இழந்த நிலையில் தன்னால் முடியும் என்ற குறிக்கோளில் இசைத் தட்டை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் வடமாகாண சபை நிதியின் ஒதுக்கீட்டில் இருந்து செல்வபுரம் அந்தோனியார் கோயிலுக்கு நன்கொடையாக ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாவும் செல்வபுரம். துர்க்கையம்மன் கோயிலுக்கு 50 ஆயிரம் ரூபாவும் செல்வபுரம் முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபாவும் செல்வபுரம் விளையாட்டுக் கழகத்திற்கு 40 ஆயிரம் ரூபாவும் செல்வபுரம் மாதர் அபிவிருத்தி கழகத்திற்கு கணனியும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

(40)

# அபிவிருத்திகள் ஸ்தம்பிதமடைவதற்கு உத்வேகமற்ற செயற்பாடே காரணம்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையும் உள்ளூராட்சி மன்றங்களும் மக்களுக்கான அபிவிருத்தித் தேவைகளை செய்யாது தட்டிக் கொண்டிருப்பதால் தான் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது வடபகுதி பல அபிவிருத்தி செயற்பாடுகளை பெற முடியாது இருக்கின்றது.

என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே. வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.



சுன்னாகம் மின்சார நிலைய வீதி ஜே -196 பகுதி மக்களது பிரச்சினைகளை மேம்படுத்துவதற்காக அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில,

தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு என்பது, தீர்க்க சிந்தனையுடன் செயற்படும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழ்த்தான் பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று இந் நாட்டில் தனித்துவமாக இருக்க வேண்டும் என்பதை நிலைநாட்ட வேண்டுமானால் சுயநலத்தையும் வெற்றுப் பேச்சுக்களையும் கைவிட்டு நியாயமாக பெற்றுக் கொள்ளக் கூடிய இலக்கை நோக்கி நாங்கள் அனைவரும் முரண்பாடுகள் அற்ற வகையில் பயணிக்க வேண்டும். இதன் மூலமே தமிழர்களது எதிர் காலத்தை சிறந்த முறையில் நிர்ணயிக்க முடியும்என்றார்.

இந்தச் சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் சுன்னாகம் இணைப்பாளர் வலைன்ரன் வலி வடக்கு எதிர்க்கட்சி தலைவர் அரிகரன், சமுர்த்தி உத்தியோகத்தர் கௌரி, ஆகியோருடன் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

# ஒஸ்மானியா அதிபருக்கான சேவைநலன் பாராட்டு விழா



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக்கின் சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எச்.ஜமால் மொஹிதின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக யாழ்.பொலிஸ் தலைமை அதிகாரி கே.டி.பாலசூரியா கலந்துகொண்டார்.

தொடர்ந்து மாநகர சபை முன்னாள் உறுப்பினர் பி.எஸ்.எம். சரபுல் அனாம், ஏ.எம்.அமீன் மற்றும ஆசிரியர்களும் பாராட்டுரை வழங்கினர். தொடர்ந்து மாணவர்களின் கௌரவிப்பும், பொன்னாடை போர்த்தி விருது வழங்கலும் இடம்பெற்றது. (105)

# தற்கொலை தினம் இன்று அனுஷ்டிப்பு

உலக தற்கொலை தடுப்பு தினம்
WORLD SUICIDE PREVENTION DAY
10th SEPTEMBER
ORGANISED BY
ශ්‍රී ලංකා සුමිත්‍රයෝ
ஸ்ரீலங்கா சுமித்ராயோ
Sri Lanka sumithrayo
Tel : 2682535

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உலக தற்கொலை தினம் இன்று அனுஷடிக்கப்படவுள்ளதுடன் கொடிதினமும அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தற்கொலை தடுப்பு எமது அனைவரது முழுமையான கடமையாகும் எனும் தொனிப் பொருளின் கீழ் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

உங்கள் வேதனையைப் புரிந்து கொள்ள யாருமே இல்லையா ஶ்ரீலங்கா சுமித்ர யோவுடன் தொடர்பு கொள்ளவும் நேரில் வரலாம் அல்லது 021-2228117 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பேசலாம் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளலாம் எனவும் இந்த தற்கொலைத் தடுப்பு தினம் குறித்து வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
பிறந்த ஆண்டு :- ..........................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்
..........................
பெற்றோர் கையொப்பம்

# பொருளாதார தடை விதித்தால் விமானப் பயணங்களை முடக்குவோம்

## ரஷ்யா கடும் எச்சரிக்கை




(மாஸ்கோ)

"ரஷ்யா மீது விதிக்கப்படும் பொருளாதார தடையை எதிர்த்து நின்று மாற்றும் சக்தி சீனா போன்று எங்களுக்கும் உண்டு. எங்கள் மீது பொருளாதார தடை விதித்தால் மேற்கத்திய நாடுகளின் விமானங்கள் எங்கள் வான் எல்லையில் பறக்க தடை விதிப்போம்.

இதன்மூலம் மேற்கத்திய நாடுகளின் பல நிறுவனங்கள் திவாலாகும் நிலை ஏற்படும் என ரஷ்ய பிரதமர் டிமிட்ரி மெத்வதேவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைனின் கிழக்கு பகுதியில் மெஜாரிட்டி ஆக வாழும் ரஷ்ய ஆதரவாளர்கள் தங்களுக்கு தன்னாட்சி உரிமை கோரி போராட்டம் நடத்தினார்கள். அது தீவிரமடைந்து உள்நாட்டு போர் ஆக மாறியது. அதில் 3000 பேர் பலியாகினர்.

கிழக்கு உக்ரைனைச் சேர்ந்தவர்களுக்கு அண்டை நாடான ரஷ்யா ஆயுதம் மற்றும் நிதி உதவி வழங்குவதாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் குற்றஞ்சாட்டின.

எனவே ரஷ்யாவுக்கு பொருளாதார தடை விதித்தன. அதைத் தொடர்ந்து தற்போது உக்ரைன் அரசுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், உக்ரைன் அதிபர் பெட்ரோ பொரொஷென்கோ ஆகியோர் பேச்சுவார்த்தை நடாத்தி போர் நிறுத்தம் ஏற்படுத்தினர்.

இந்த நிலையில் ரஷ்யா மீது மேலும் பொருளாதார தடை விதிக்க அமெரிக்கா மற்றும் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் முடிவு செய்துள்ளன. இதற்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# மோடியின் நிவாரண உதவி நவாஸ் நன்றி தெரிவிப்பு

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் வெள்ள நிவாரண உதவிகளைச் செய்ய முன்வந்த, பிரதமர் நரேந்திர மோடிக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீ.்ப் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நன்றி தெரிவித்தார்.

இதையடுத்து மோடிக்கு நவாஸ் ஷெரீ.்ப் அனுப்பிய பதில் கடிதத்தில் கூறியிருப்பதாவது, பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி அளிக்க முன்வந்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரிடர் மேலாண்மையில் ஒத்துழைப்பு அளிப்பதன் மூலம், அந்தப் பகுதியில் அமைதியும், வளர்ச்சியும் ஏற்படும் என்று நவாஸ் குறிப்பிட்டுள்ளார்.

# உலகை அழிக்கும் "கடவுள் துகள்"

## எச்சரிக்கும் விஞ்ஞானி

"கடவுள் துகள்" எனப்படும் "ஹிக்ஸ் போஸன்" இந்த பிரபஞ்சத்தையே அழித்துவிடும் என பிரித்தானிய விஞ்ஞானி ஸ்டீ.்பன் ஹாக்கிங் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, "கடவுள் துகள்" என்பது ஒரு அணு. இது புரோட்ரோன் (Proton) நியூட்ரோன் (Neutron), எலெக்ட்ரோன் (Electron) ஆகிய துகள்களைக் கொண்டது.

இதில் ஒரு புரோட்டான் என்பது குவார்க் (Guvaark) பெர்மியான் (Bermiyon) குளுயான்ஸ் (Gluyans) ஆகிய துணை அணுத் துகள்களால் (Sub atomic particles) ஆனது.

சுமார் 100 பில்லியன் கிகா-எலக்ட்ரானின் (Giga Electron) அதிகமான ஆற்றலில் "கடவுள் துகள்" பெரிய நிலைத்தன்மையை பெறலாம். இதனால் "பேரழிவு வெற்றிட சீர்கேடு" (Catastrophic vacuum decay) ஏற்பட்டு காலம், நிலைகுலைந்து போகும் அபாய வாய்ப்புக்கள் உள்ளது.

இத்தகைய நிகழ்வு எப்போது வேண்டுமானாலும் நிகழலாம், அது வருவதை நம்மால் பார்க்க முடியாது என்றும் இதனை அவ்வளவு எளிதாக நாம் மறந்து விடவோ, அலட்சியம் காட்டவோ முடியாது எனவும் கூறியுள்ளார்.

# மலேசிய விமானம் பற்றி அதிசயங்கள் நிகழாதா

## எதிர்பார்க்கும் சீன மக்கள்

மலேசிய விமானம் ஆர் 370 மாயமாகி ஆறு மாதங்கள் ஆன நிலையிலும், ஏதாவது அதிசயங்கள் நிகழாதா என எதிர்பார்த்து கிடக்கின்றனர் சீன மக்கள்.

கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி நள்ளிரவு 239 பேருடன் மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து சீன தலைநகர் பெய்ஜிங்கிற்கு கிளம்பிய மலேசிய விமானம் ஆர்370 மாயமானது.

செயற்கைகோள் தகவலின் படி, விமானம் இந்தியப் பெருங் கடலில் விழுந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்றுடன் 6 மாதங்கள் நிறைவடைவையொட்டி, இதில் பயணம் செய்த சீனர்களின் உறவினர்கள் பீஜிங்கில் உள்ள புத்த கோவிலில் பிரார்த்தனை செய்தனர்.

பிரார்த்தனையின்போது ஒருவர் கவிதை வாசிக்க சிலர் அதைக்கேட்டு அழுதனர், ஏதேனும் அதிசயம் நிகழ்ந்து விடாதா என்ற நம்பிக்கையில் உள்ளனர் சீன மக்கள். இதுநாள் வரையிலும் விமானத்தின் பாகங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# தீவிரவாத தலைவர்களை கொன்றால் ஒருகோடி பரிசு

ஐ.எஸ்.ஐ.எஸ், தலிபான் மற்றும் அல்-கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவர்களை கொல்பவர்களுக்கு ஒரு கோடி ரூபா வழங்கப்படும் என்று இந்திய ஷியா முஸ்லிம் பிரிவு அறிவித்துள்ளது.

அல்கொய்தா தீவிரவாத பிரிவு தலைவனான அய்மான் அல்ஜவாஹிரி(63) வெளியிட்ட காணொளியில், இந்திய துணைக் கண்டத்தில் அல்கொய்தா தீவிரவாத பிரிவுக்கு பக்கபலமாக காயிதத்அல்ஜஹாத் என்ற பெயரில் புதிய கிளை நிறுவப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முஸ்லிம் தலைவர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு வெளியாகியுள்ள நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ், தலிபான், அல்-கொய்தா, ஜமாத்-உ-தாவா, ஹர்கத் உல் முஜாஹிதீன் ஆகிய தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களை கொல்பவரகளுக்கு 1 கோடிரூபா வழங்கபடும் என்று இந்திய ஷியா முஸ்லிம் பிரிவு அறிவித்துள்ளது. இதனையடுத்து 5 தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் தலைக்கு பரிசு வழங்குவது குறித்த தீர்மானம் எந்த எதிர்ப்பும் இன்றி தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், மனிதநேயத்தையும், அப்பாவி மக்களையும் படுகொலை செய்யும் மேற்கண்ட தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் இந்த பூமியில் வாழவே தகுதியற்றவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

# எபோலா பாதித்த நாடுகளுக்கு உதவுமாறு ஐ.நா. அழைப்பு



எபோலா" வைரஸ் நோய் பாதித்த, மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லைபீரியா இந் நோய்த்தாக்கத்திலிருந்து மீள கூடுதல் ஒத்துழைப்பை வழங்குமாறு சில நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் - கீ-மூன் அழைப்பு விடுத்துள்ளார். மேலும் இதுகுறித்து பான்கீ மூன், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், பிரஞ்சு அதிபர் பிரான்சுவா ஹாலண்ட், கியூபா அதிபர் ராவுல் காஸ்ட்ரோ உள்ளிட்ட தலைவர்களுடன் பேசியுள்ளதாகவும், சுதந்திரமான மருத்துவ அமைப்புக்கள் மூலம் கடின உழைப்பினால் சர்வதேச சமூகம் எவ்வாறு மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு உதவ முடியும் என்பது குறித்து விவாதித்ததாகவும் ஐ.நா. செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில் வெள்ளப்பெருக்கு உணவின்றி மக்கள் தவிப்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக மிக பலத்த மழை பெய்ததால் வரலாறு காணாத பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன.

பலத்த தொடர் மழை காரணமாக காஷ்மீர் மாநிலத்தின் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கும், நிலச்சரிவுகளும் ஏற்பட்டன. இதில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் முற்றிலும் அழிந்த நிலைக்கு மாறியுள்ளன.



மழை வெள்ளத்திலும், நிலச்சரிவுகளிலும் சிக்கி 200 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகி விட்டனர். ஏராளமானவர்களை வெள்ளம் அடித்துச் சென்று விட்டது.

அவர்கள் கதி என்ன ஆனது என்று தெரியவில்லை. எனவே பலி எண்ணிக்கை உயரும் என்று அஞ்சப்படுகிறது.

வெள்ளத்தில் சிக்கியவர்களின் உடமைகள் அனைத்தும் அழிந்து விட்டன. எனவே சுமார் 315 தொன் அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு இலட்சம் போர்வைகள், 5 ஆயிரம் கூடாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

4 இலட்சம் பால் பைக்கற்றுகள் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் இராணுவத்தின் பேஸ்புக், டுவிட்டர் இணையத்தளங்கள் மூலம் தகவல் பரிமாற்றம் நடந்து வருகிறது.

அது போல மீட்புப் பணிகளை முழுமையாக செய்து முடிக்க 10 நாட்கள் ஆகும் என்று இராணுவத்தினர் கணித்துள்ளனர். எனவே அதுவரை விமானத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் முடிந்த பிறகும் மக்கள் சகஜ நிலைக்கு வர நீண்ட நாட்களாகும் என்றும் கருதப்படுகிறது.

# பனியிலும் தீயிலும் நடக்கும் ரோபோ



பனிப்புயல், தீயிலும் நடக்கக்கூடிய சிறிய உருவமும், நான்கு கால்களும் கொண்ட, "ரோபோ"வை, அமெரிக்க விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் இரசாயனம் மற்றும் இரசாயன உயிரியல்துறை மற்றும் கார்னல் பல்கலைக் கழகத்தின் மெக்கானிக்கல் அண்ட் ஏரோஸ் பேஸ் பொறியியளாளர் துறையின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் விஞ்ஞானிகள் கொண்ட குழு, இந்த ரோபோவை வடிவமைத்துள்ளனர்.

இதுபோன்ற பல ரோபோக்கள் தயாரிக்கப்பட்டு இருந்தாலும், உறுதியான கட்டமைப்பை உருவாக்கவில்லை. எட்டு கிலோ வரையிலான பொருட்களை தூக்க வல்லது. பல மணிநேரம் தொடர்ந்து செயலாற்றும் வகையில் இலகு ரக சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த ரோபோ, சாதாரண சுற்றுச்சூழலில் எந்த இயந்திரத்துடனும் இணைக்கப்படாமல் தனித்து இயங்கும் வகையில், நவீனமாக உருவாக்கப்பட்டுள்ளது.

# விழிப்புலன் இழந்தவர்களின் வாழ்வை வளப்படுத்த நிதியம்

## சமூகசேவை அமைச்சின் செயலாளர் தகவல்

(திருநெல்வேலி)

எமது அமைச்சில் விழிப்புலனற்றவர்களுக்கான நிதியமொன்று இயங்கி வருகிறது. அவர்களுக்கான உதவி பற்றி நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். விழிப்புலனிழந்தவர்களும் மனிதர்களே அவர்களுக்கு சிறந்த எதிர்காலம் காத்திருக்கிறது எனத் தெரிவித்தார். சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் வாழ்வகம் நிறுவனத்தினால் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்ட கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்தத் தடகளப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வாழ்வகத்தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர், அங்கவீனர்களை நாங்கள் வித்தியாசமாகப் பார்க்கக் கூடாது அனைத்து மக்களும் சமமாகக் கருதப்படவேண்டும் என அரசியலமைப்பிலும் சொல்லப் பட்டிருக்கிறது.

அங்கவீனர்களுக்கு மாதாந்த நிதி உதவியாக எமது அமைச்சு 3000 ரூபாவை வழங்கி வருகிறது. இது அதிகரிக்கப்பட வேணடும் என நான் முயற்சித்து வருகின்றேன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஐம்பது பேருக்கு இந் நிதி உதவியை செய்வதற்கு இப்போது ஏற்பாடாகியுள்ளது. சிகிச்சை மேற்கொள்வதற்கு இருபதினாயிரம் ரூபாவை வழங்குவதற்கு சமூக சேவைகள் அமைச்சு தயாராகவுள்ளது.

சுப்பிரிவாசனா லொத்தர் மூலம் அங்கவீனர்களுக்கான வீடமைப்பு பணிகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். கல்விக்கான உதவியாகக் கல்வி கற்போருக்கு 'லப்ரொப்' மற்றும் கணனிகளை வழங்கி உயர்கல்விக்கான வசதிகளை செய்வதற்கு ஏற்பாடுகள் உள்ளன.

அங்கவீனமுற்றவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவிகளையும் எமது அமைச்சு செய்து கொடுத்துள்ளது. திருநெல்வேலி சுறோட், மன்னார் மலடப், வவுனியா ஓகான், கிளிநொச்சி, முல்லைத்தீவு செம்மலை போன்ற இடங்களில் நாங்கள் சுயதொழில் முயற்சிக்கான ஏற்பாடுகளை செய்துகொடுத்துள்ளோம். ஏற்கனவே உலக வங்கியின் நிதி உதவியுடன் இதனை அமுல்படுத்தி வருகின்றோம்.

சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளைக் களைந்து அங்கவீன முற்றவர்கள், செவிப்புலனற்றவர்கள், விழிப்புலனிழந்தவர்கள், உளவளக்கோளாறு உடையவர்கள் அனைவரையும் எமது பிள்ளைகளாக, சகோதரர்களாக மதித்து எதிர்காலத்தில் அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்னும் எதிர்பார்ப்பில் சமூக சேவைத் திணைக்களம் இயங்கி வருகிறது. எனக்கூறினார். (137)

## தலைமன்னார் கடற்பரப்பில் 6 இந்திய மீனவர்கள் கைது

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் தமிழக மீனவர்கள் 6 பேரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். இராமேஸ்வரத்தில் இருந்து மீனவர்கள் நேற்றுமுன்தினம் 400 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். அவ்வாறு சென்ற படகுகளில் ஒன்று பழுதடைந்ததால் கச்சதீவு அருகே அது தத்தளித்துக்கொண்டிருந்தது என்றும் இதன்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அதிலிருந்த 6 பேரைக் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களை கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகளை மன்னார் கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே இலங்கைச் சிறையில் 15 மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைப்பெண் தீயில் எரிந்து மரணம் தமிழக முகாமில் விபரீதம்

திருவண்ணாமலை வந்தவாசி அருகேயுள்ள இலங்கை அகதிகள் முகாமில் இளம் பெண்ணொருவர் தீமூட்டித் தற்கொலை செய்துள்ளார் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. குறித்த முகாமில் வசித்து வந்த பரமேஸ்வரி(வயது -30) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணுக்கும் விழுப்புரம், கீழ்புதுப்பட்டு அகதிமுகாமைச் சேர்ந்த தேவதாஸ் என்பவருக்கும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்தது என்றும், கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் குறித்த பெண் கணவனை விட்டு பிரிந்து தனது தாய்வீட்டுக்குச் சென்றுவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தப்பெண் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டிக் கொண்டுள்ளார். தீயை அணைத்து அருகிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். இருந்தும் சிகிச்சை பலனளிக்காது மரணமாகிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கீழ்கொடுங்கலூர் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

## வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுத்த இலங்கை இளைஞன் தமிழகத்தில் கைது

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்திற்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுத்த தாப்பாத்தி அகதிகள் முகாமைச் சேர்ந்த இலங்கை இளைஞர் ஒருவரை தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்திற்கு வெடிகுண்டு வைக்கப்போவதாக, மர்ம நபர் ஒருவர் தொலைபேசி மூலம் விடுத்த அச்சுறுத்தலை அடுத்து தமிழக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் தாப்பாத்தி இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த விஜயபிரபாகர் என்ற நபரே அச்சுறுத்தல் விடுத்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவர், கடந்த 2012ஆம் ஆண்டு முகாமில் இருந்து தப்பிச் சென்றவர் என்பதும் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் திருட்டு உள்ளிட்ட மேலும் பல குற்றச் செயலகளில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## போருக்குப் பிந்திய அபிவிருத்தி ஜேர்மன் ஜனாதிபதி மகிழ்ச்சி



இலங்கையில் போருக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் மகிழ்ச்சியளிப்பதாக ஜேர்மன் ஜனாதிபதி தெரிவித்துள்ளாரென இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. போருக்குப் பிந்திய இலங்கையின் முயற்சிகள் குறித்து ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் கருணாரத்ன அமுனுகமவை ஜேர்மன் ஜனாதிபதி தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பின்போது இலங்கை ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்து கடிதம் ஒன்றையும் ஜேர்மன் ஜனாதிபதி ஜோஹிம் ஹக் தூதர் ஊடாக அனுப்பிவைத்துள்ளார்.

அத்துடன் போருக்கு பின்னர் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக, பொருளாதார முன்னேற்றம் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை என்பவற்றுடன் தேசிய நல்லிணக்கம் என்பன குறித்து தான் மகிழ்ச்சி அடைகிறார் என்றும், இருநாடுகளுக்குமிடையேயான உறவை மேலும் பலப்படுத்த தான் விரும்புகிறார் என்றும் ஜேர்மன் ஜனாதிபதி இலங்கைத் தூதரிடம் தெரிவித்தார் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

### மூன்றாவது..

தடவைகள் போட்டியிடலாம் எனத் தெரிவித்த அரசமைப்பின் 18 ஆவது திருத்தம் நல்லெண்ண அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை.அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் அது உரிய முறையில் இடம்பெறவில்லை.

இதன்காரணமாகவும், இது பொது நலவழக்கு இல்லை என்பதாலும் ஜனாதிபதி தற்போதைய உச்ச நீதிமன்றத்தின். ஆலோசனையைக் கோரமுடியாது, என அவர் தெரிவித்துள்ளார்.

### வடமாகாண...

எஸ். திருவாகரனிடமும், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ரவீந்திரனிடமும், வடமாகாண ஆளுநரினால் உத்தியோக பூர்வமாக இவை கையளிக்கப்பட்டன.

சுமார் 17 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சொகுசு வாகனங்களில் வடமாகாண முதலமைச்சருக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனமும், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திற்கு 7 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனமும் கையளிக்கப்பட்டன.

இக்கையளிப்பு நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலக்சுமி மற்றும், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் வடமாகாண திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (25)

### தோற்றிய...

அனுமதிக்கப்படவுள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 1000 மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப் படவுள்ளனர்.

அத்துடன் இரண்டு புதிய பட்டநெறிப்பாடங்கள் இம்முறை அறிமுகம் செய்யப்படவுள்ளன.

மென்பொருள்பொறியியல், மொழிபெயர்ப்பு கற்கை ஆகியனவே அவையாகும். இந்தக் கற்கைநெறிகளுக்கு 50தொடக்கம் 75 வரையான மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

மென்பொருள் பொறியியல் கற்கை நெறி களனி,யாழ்ப்பாணம், ஆகிய பல்கலைக்கழகங்களிலும், மொழிபெயர்ப்பு கற்கைநெறி சப்ரகமுவ மற்றும் களனி பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

### புதிய...

தனது கன்னி உரையில், ஐக்கிய நாடுகளின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பை தரவேண்டும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இந்திய மீனவர்...

சற்று குறைந்து காணப்பட்டிருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் இந்தியப் பிரதமரையும், தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களையும் சந்திக்கச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் தொழில் புரியலாம் என தமிழ்நாட்டில் தெரிவித்திருந்தனர்.

இதனால் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டையும் மீறி மீண்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவல் அதிகரித்துள்ளது. அன்றிலிருந்து இந்திய மீன்பிடிப் படகுகள் கூட்டம் கூட்டமாக எமது எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வழிதிறந்து விட்டிருக்கின்றனர்.

பருத்தித்துறையின் "முனை" கடற்பரப்பில் ஒரு படையாகத் திரண்டு ஒரே நேரத்தில் 100 இற்கும் மேற்பட்ட படகுகள் மூலம் வந்த இந்திய மீனவர்கள் இலங்கை-இந்திய அரசுகளால் தடைசெய்யப்பட்ட இரட்டைத் தள ட்ரோலர் மீன்பிடியில் ஈடுபட்டு எமது மீனவர்களின் வலைகளையும் வளங்களையும் சேதப்படுத்தி உள்ளனர்.

இதேவேளை இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் இலங்கை மீனவர்களுக்குச் சொந்தமான 17 மீன்பிடி வலைகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் அதன் மொத்தப் பெறுதி 500000 ரூபாவாகும்.

இச்சம்பவத்தினால் எமது கடற்றொழிலாளர்கள் மீன்பிடி வலைகள் சேதமாகி விடும் என்ற அச்சத்தினால் இவர்களின் ஊடுருவல் ஏற்படுகின்ற நாட்களில் தொழிலுக்குச் செல்வதை நிறுத்தி விடுவார்கள். மேலும், இச் சம்பவங்கள் மற்றும் சேதாரங்கள் குறித்த முறைப்பாடுகளைப் பதிவதற்கு பொலிஸாரும் மறுக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியவந்துள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எமது மீனவர்களுக்கும் அவர்களது வாழ்வாதாரத்திற்கும் இழைக்கப்பட்ட சேதம் மற்றும் தடைசெய்யப்பட்ட இரட்டைத் தள ட்ரோலர் மீன்பிடி முறையினால் எமது கடல் உணவு வளத்திற்கு ஏற்படுத்தப்பட்ட அழிவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடி மாற்று நடவடிக்கைகளை எடுக்கும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டமைப்பு...

தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது. இதனை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி என்ற ரீதியில் உதவிகளை வழ்ங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

உதவிகளை வழங்குமாறு தென்னாபிரிக்காவிற்கு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். நிபந்தனைகள் இன்றி கலந்துரையாடல்களை நடத்துவது என்றால், அது சிறந்ததாக அமையும். அது குறித்து எந்தவித பிரச்சினையும் கிடையாது. நாட்டின் அரசாங்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அல்ல என்பதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே நாட்டின் அரசாங்கம். சிறுபான்மை என்ற விதத்தில், பெரும்பான்மையினருக்கு, அவர்களினால் நிபந்தனைகளை விடுக்க முடியாது. நிபந்தனைகள் இன்றி கலந்துரையாடல்களை அவர்கள் நடத்த முன்வர வேண்டும்.

கால வரையறை குறித்து அவர்களுக்கு நிபந்தனைகளை விடுக்க முடியாது. கலந்துரையாடல்களின் போது எழுகின்ற பிரச்சினைகள் என்னவென்பது குறித்து அவர்கள் பார்க்க வேண்டும். அவை குறித்து கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். சர்வதேச தலையீடுகள் குறித்த முடிவுகளை நாட்டின் அரசாங்கமே எடுக்க வேண்டும். எமது நாட்டின் அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை என்றால், அதனைச் செய்ய முடியாது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்கு நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை. அவர்கள் வரமாட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது என்பதற்காக அவர்களினால் வர முடியுமா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

# 'ஷரிஆ' சட்டத்தை நீக்க வேண்டும் தவறின் வெடிக்கும் போராட்டம்

## எச்சரிக்கிறது பொதுபலசேனா

(கொழும்பு)

நாட்டில் உள்ள 'ஷரிஆ' சட்டம் பாரிய பிரச்சினையாக உள்ளதாகவும் அதனை நீக்க வேண்டுமெனவும் பொதுபலசேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுபலசேனாவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் 'ஷரிஆ' சட்டத்தின் அடிப்படையில் இயங்கும் வங்கி முறைமை தடை செய்யப்பட வேண்டும். இதற்காக நாடளாவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையால் நாட்டில் பிரச்சினை இல்லை. ஆனால், அதனைவிடப் பயங்கரமாகவுள்ள இஸ்லாமிய 'ஷரிஆ' சட்டத்தை நீக்க வேண்டும். இதுவே எமது பாரிய பிரச்சினையாகும்.

இந்த நாட்டில் 'ஷரிஆ' சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என நாடாளுமன்றத்தில் மசோதா கொண்டு வருவதும் சட்டவிரோதமானது. அதனை நிறைவேற்றி சட்டமாக்குவதும் சட்ட விரோதமானது.

இந்த நாட்டில் காஸி நீதிமன்றங்கள் 'ஷரிஆ' சட்டத்தை நடை முறைப்படுத்துகின்றன. இவை எமது நாட்டுக்குத் தேவையற்றது.

மேலும், 'ஷரிஆ' சட்டத்தை நடைமுறைப்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இந்த நாட்டுக்கு மிகவும் பயங்கரமான ஒன்றாகும்.


பல்கலைக்கழகத்தில் உள்ள சகல பீடங்களும் 'ஷரிஆ' சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்படுகின்றன.

இஸ்லாமிய கற்கைகளுக்கான பிரிவு, இஸ்லாமிய சிந்தனைக்கும், கலாசாரத்துக்குமான பிரிவு, இஸ்லாமிய 'ஷரிஆ' சட்டப் பிரிவு, இஸ்லாமிய வங்கி மற்றும் நிதி முறைமைப் பிரிவு என்ற பெயர்களில் பல்வேறு பீடங்கள் இயங்குகின்றன.

இந்த நாட்டிலிருந்து 'ஷரிஆ' சட்டம் துடைத்தெறியப்பட வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக சட்டங்களை நடைமுறைப்படுத்தும் இந்த தனியார் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சட்டக் கல்லூரி பரீட்சையை மூன்று மொழிகளிலும் நடத்துங்கள்

மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

தமக்கான பரீட்சைகளை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் நடத்தக்கோரி இலங்கை சட்டக்கல்லூரி மாணவர்கள் நேற்றைய தினம் சட்டக்கல்லூரி நிர்வாகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் மாணவர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சட்டத் தொழில் உயர்ந்த வர்க்கத்திற்கு மட்டுமா சொந்தம்? இது இலங்கையின் தேசிய மொழிக்கொள்கையா? என மாணவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இலங்கை சட்டக் கல்லூரி நிர்வாகம், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது வருட பரீட்சைகளுக்கான வினாத்தாள்களை தமிழ் மற்றும் சிங்கள மொழியில் வழங்க வேண்டும் எனத் தெரிவித்த மாணவர்கள் ஆங்கில மொழியிலான வினாத்தாள் வழங்குவதற்கு சட்டக்கல்லூரி நிர்வாகம் எடுத்துள்ள முடிவிற்கும் தமது கட்டணத்தை தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை ஜனாதிபதியின் செயலாளரின் அலுவலகத்தில் கையளித்தனர்.

## குருநகர் யுவதியின் வழக்கு நவம்பருக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு பின்புறமாக உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட குருநகர் ஜெரோம் கொன்சிறிற்றாவின் வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு யாழ். நீதவான் நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த சித்திரை மாதம் குருநகர் அடம்பன் வீதியைச் சேர்ந்த ஜெரோம் கொன்சிறிற்றா (வயது-23) என்ற யுவதி சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த யுவதியின் மரணத்துடன், யாழ். மறைக்கல்வி நடுநிலைய பாதிரியர்கள் இருவர் சம்பந்தப்பட்டதாக பெற்றோரினால் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், யாழ். நீதிவான் நீதிமன்றில் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக வழக்கு நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு கடந்த யூலை மாதம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குறித்த யுவதி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என சட்ட வைத்திய அதிகாரி மன்றில் தெரிவித்திருந்த நிலையில், வழக்கு விசாரணை நிறைவுற்றிருந்தது.

அந்நிலையில், குறித்தயுவதி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றார் என் தடயம் பொலிஸாரிடம் இருந்தால், தடயங்களை நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மேற்படி வழக்கினை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ்.நீதிவான் நீதிபதி பொ. சிவகுமார் பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு வழக்கினை ஒத்திவைத்தனர். (25)

## ஐ.நா. அமைதிப் படையில் இலங்கையின் வான்படை வீரர்கள்

ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் பணிகளில் ஈடுபடுவதற்காக மூன்று ஹெலிகொப்டர்களில் விமானப்படை வீரர்களை அனுப்பவுள்ளதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கோலித குணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் தீர்மானத்திற்கு அமைய, இந்தப் படையணி மூன்று மத்திய ஆபிரிக்க நாடுகள் மற்றும் சூடானின் அமைதிகாக்கும் பணிகளுடன் இணைக்கப்படவுள்ளன. ஐக்கிய நாடுகளின் பணிகளில் இலங்கை விமானப்படை இணைந்து செயற்படவுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு டீசல், மண்ணெண்ணையால் பாரிய நட்டம்

### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு லீற்றர் டீசலுக்கு 5 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 23 ரூபாவினாலும் நட்டத்தைச் சந்திப்பதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

குருநாகலில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலினால் மட்டுமே இலாபத்தை சம்பாதிக்கின்றது. எனினும் இந்த இலாபம் டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றால் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்வதற்கு போதுமானதல்ல. பெற்றோல் லீற்றர் ஒன்றின் கொள்வனவு 102 ரூபாவாக உள்ள அதே வேளை, அரசாங்கம் லீற்றரொன்றிற்கான இறக்குமதி வரியாக 45 ரூபாவை விதிக்கின்றது.

நாங்கள் நாளொன்றுக்கு 5000 மெற்றிக் தொன் டீசலை விற்பனை செய்கின்றோம். ஆனால் 2000 மெற்றிக் தொன் பெற்றோலே விற்பனை செய்யப்படுகிறது. எனவே இதன் மூலம் நட்டத்தை ஈடுசெய்ய முடியாது.

தற்போது நாங்கள் நீண்ட கால அடிப்படையில் எரிபொருள் கொள்வனவு முறையை மாற்றியுள்ளோம். இதனால் ஒரு பரலுக்கு இரண்டு டொலர்களை எம்மால் சேமிக்க முடிகிறது.

கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து எரிபொருள் விலைகளை நிலையாகப் பேணி வருகின்றோம். எனினும், அந்தக் காலப் பகுதியில் உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் அதிகரித்திருந்தன. இதுவும் மிகப் பெரிய நட்டத்திற்கு முக்கிய காரணம்.

கடந்த 2012 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 9700 மில்லியன் ரூபாவை நட்டமாகவும், 9700 மில்லியன் ரூ நட்டமாகவும் அந்த நட்டம் 2013 இல் 7000 மில்லியன் ரூபாவாகக் குறைவடைந்தும் உள்ளது.

அனைத்து அரசாங்கங்களும் இறக்குமதியாகும் எரிபொருளுக்கு 40 முதல் 80 வீத வரி விலக்கை அதிகரிக்கின்றன. ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையிலேயே எரிபொருளின் விலைகள் குறைவடைந்து காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் சட்டத்தை நியாயமாக அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும்

### வலியுறுத்தும் மனித உரிமைகள் ஆணைக்குழு

தேர்தல் சட்டத்தை நியாயமான முறையில் நிறைவேற்றுமாறு அரச அதிகாரிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

மொனராகலை மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக அறிவுறுத்தியுள்ளனர்.

தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளைச் சேர்ந்த அரச ஊழியர்கள் விதிமுறைகளை பதிவு செய்து தமது தொழிற் சங்கங்களின் ஊடாக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தடைகள் இல்லை என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் சட்டப் பிரிவுப் பணிப்பாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கூறியுள்ளார்.

எனினும், இந்த அரசியல் செயற்பாடுகளுக்கு அரச வளங்கள், விடுமுறைகள் அல்லது வேறு சலுகைகள் கிடைக்குமாயின் அது சட்டத்திற்கு முரணானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்கள் அமைதியான முறையில் வாக்களித்து தமது விருப்பத்திற்கு ஏற்ப பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்காகவே தேர்தல்கள் சட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரங்களுடன் கூடிய தேர்தல்கள் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பது மக்களின் அடிப்படை உரிமையாக உள்ளதால் அது மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு முன் நிற்கும் எனவும் தெரிவித்துள்ளார்

## சாட்சிகளை பாதுகாக்கும் சட்டம் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை என சர்வதேச அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்ற நிலையில் சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் நாளைய தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இன்றைய தினம் சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

சாட்சியாளர்களும் குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்களும் ஒடுக்கப்படுவதனை தடுக்கும் நோக்கிலேயே சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டத்தை தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேரணையாக ஐக்கிய தேசியக் கட்சியின் கரு ஜயசூரிய, விஜயதாச ராஜபக்ஷ போன்றவர்கள் கடந்த காலங்களில் சமர்ப்பித்த போதிலும் அவற்றை அரசாங்கம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.